மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 3 சுற்றம் : 11 நவம்பர் 2015 விலை : ரூ.10/- ஆசிரியர் : விசவனூர் வே. தளபதி



# மழையில் மூழ்கிய தமிழகம்

சேர்வோம் உயர்வோம் !

# செந்தமிழ்நாடு ஊடகவியலாளர்கள் சங்கம்

அரசு பதிவு எண்: 70/2015.

## அனைவருக்கும் தீபஒளி திருநாள் நல்வாழ்த்துகள்

பதிவு எண்: 70 / 2015.



**விசவனூர் .வே.தளபதி**
தலைவர்



**எஸ்.ரங்கநாதன். BSc.,**
செயலாளர்



**S.V.Jai.இமயவரம்பன். B.sc.,M.A.,B.L.,Ph.D.,**
பொருளாளர்

**ஊடகவியலாளர்கள் உரிமைகளைக் காப்போம் !**
**உலகம் வியக்க ஒன்றாய்த் திரள்வோம் !**

செய்தி ஊடக நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.
உறுப்பினராகுங்கள்,
நமக்குரிய உரிமைகளையும் சலுகைகளையும் வென்றெடுப்போம்.
ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனிக்கிழமை
நேரம்: மாலை 6.00 மணிமுதல் 7.40 மணி வரை சங்கக்கூட்டம் நடைபெறும்.

இடம்: செந்தமிழ்நாடு ஊடகவியலாளர்கள் சங்கம்
எண் 124, என்.டி.ஆர். தெரு, இரங்கராசபுரம்,
கோடம்பாக்கம், சென்னை 600 024.
தொலைபேசி: 044-42154408, அலைபேசி : 8056281973.

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly November 2015

ஆசிரியர்
**விசவனூரர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்கள்
பேராசிரியர் **அப்பாத்துரை**
**அ.வெற்றிவேந்தன்** எம் .ஏ., பி.எல்.,
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**அ. உமாமகேசுவரி** எம் .ஏ.,
**ஜெ. ராஜா சிங்,**
**ஜெய்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,
செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
**A.அமல்ராஜ்**
**க. பவானி** பி.ஏ.,
**நாராயணன்**
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**ஜான்டேவிட்**
**பெ. அர்ஜுன்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
**வே. பால்ராஜ்** மதுரை
**ஞா. ஜான்சன் டேவிட்** மதுரை
**டி. வி. ரமணி**
**குமார் செங்கல்பட்டு**
**ராஜா சாக்ரடீஸ்** தஞ்சை
**த. சுஜாதா** பி.காம்., எம்.பி.ஏ.,
**V.கணேஷ்** திருவல்லிக்கேணி
வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**இரமேஷ்**

அலுவலக முகவரி
13/5 புத்தா தெரு, கோடம்பாக்கம் ,
சென்னை 600 024
அலைபேசி : 8056281973, 9444363917.
மின்னஞ்சல்:
mutram2010@gmail.com
இணைய தளம் :
www.mutram.in

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
Rangarajapuram branch.
Kodambakkam, chennai

## உள்ளே

இடித்துரைப்பு தேசத் துரோகமா?
தலையங்கம்........ 4

ஜாஸ் சினிமா நிறுவனத்துக்கு
கைமாறும் லக்ஸ் சினிமாஸ்........ 6

காவிரி உரிமைக்கு நடிகர்சங்கம் குரல் கொடுக்காது
என்ற முடிவை நடிகர் விஷால் மாற்ற வேண்டும்
பெ. மணியரசன் அறிக்கை........ 8

டெங்கு........ 10

மழையில் மூழ்கும் தமிழகம்........11

பூக்கள் (கவிதை)........ 16

மக்கள் நீதிமன்றம் சமரச தீர்வுமுறை........ 17

திருந்துமா இந்தியா?........19

சகிப்புத் தன்மை........ 21

விவசாயிகள் தற்கொலை........ 22

எப்போது சமமாவார்கள் (சிறுகதை)........ 25

TNPC குரூப் 2 A தேர்வு
1862 காலியிடங்கள்........ 27

மீண்டும் மீண்டும் தேர்ந்தெடுப்பார்கள்........ 30

4நிஏர்டெல்லின் ஏமாற்று வேலை........32

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.



# இடித்துரைப்பு தேசத்துரோகமா?



முழு மதுவிலக்கை வலியுறுத்தி தமிழ்நாடு முழுதும் போராட்டங்கள் நடந்து வருகின்றன. பா ம க முதல் மற்ற எல்லாக் கட்சிகளும் மதுவிலக்கை கையில் எடுத்திருக்கின்றன. அதிமுக மௌன மாகவே டாஸ்மாக்கை நடத்திக் கொண்டிருக்கிறது. கடந்த தீபாவளி விற்பனையை விட அதிகமாக விற்றாக வேண்டும் என்று டாஸ்மாக் பணியாளர்களுக்கு வாய்மொழி உத்தரவு போடப்பட்டிருக்கிறதாம். மதுவால்தான் அரசுச் சக்கரம் சுழன்று கொண்டிருக்கிறது என்ற நிலை நிலவுகிறது.

பாடகர் கோவன் அவர்கள் மதுவை எதிர்த்து பாடிய பாடல் சமூக வலைதளங்களில் மிக விரைவாகப் பரவ, என்ன செய்கி றோம் என்ற உணர்வே இல்லாமல் அவரை தேசத்துரோக வழக்கில் கைது செய்து சிறையில் அடைத்து விட்டது செயலலிதா அரசு. “மூடு டாஸ்மாக்கை மூடு. ஊருக்கு ஊரு சாராயம் தள்ளாடுது தமிழகம்“ என்ற வரிகள் அந்தப் பாடலின் தொடக்கமாக இருக் கிறது. இந்துப் பாடல் அரசுக்கு எதிராக மக்களைத் தூண்டி விட்டு பொது அமைதியைக் குலைக்கும் வகையிலும் தமிழக அரசின் மதுவிலக்கு கொள் கையை கொச்சைப்படுத்தும் வகையிலும் இருப்பதாக போலீசார் பதிவு செய்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இ.பி கோ.124(எ) (தேசத்துரோகம்) 153 (இருபிரிவினரிடையே சண்டையை மூட்டுதல்) 505(1) (குற்றம் செய்யத் தூண்டுதல்) என்ற மூன்று சட்டப்பிரிவுகளில் வழக்கு போடப்பட்டுள்ளது.

பின்னர் வேறு சில வழக்குகளைப் புனைந்து அதையும் அவர் தலைமேல் சுமத்தியிருக்கிறது. கீழத்தஞ்சை மாவட்டத்தில் குடவாசல் பக்கத்தில் பெருமங்களம் என்ற சிறிய கிராமத்தில் பிறந்தவர்.

அப்பாவும் அம்மாவும் விவசாயக் கூலிகள், நடவு வயலில் அம்மா விதவிதமாய் பாடுவதைக் கேட்டு வளர்ந்தவர். நெருஞ்சிப் பூ சல்லடையாம் நெஞ்சில் ஒரு வேதனையாம், நெஞ்சுவிட்டு சொன்னேனுன்னா. நித்தம் ஒரு சண்டையாகும்'னு அம்மா ராகத்தோடு இழுத்துப் பாடின பாட்டு இன்னமும் மனசுக்குள்ளயே நிக்குது என்று அடிக்கடி சொல்கிறவர். அப்பா ஒரு கோலாட்ட வாத்தியார், அதுக்கு உண்டான பாட்டுகளை ராத்திரி எல்லாம் சொல்லிக்கொடுப்பாராம். சோற்றைப் போலவே இசையையும் உண்டு வளர்ந்தவர் கோவன் அவர்கள்.

கோவன் ஐ டி ஐ முடித்துவிட்டு, திருச்சி பெல் நிறுவனத்தில் வேலை செய்தவர் அப்போதுதான் தோழர்களோடு தொடர்பு ஏற்பட்டது கோவனுக்கு. தோழர்களால் சமூக அவலங்களைத் தோலுரித்துக் காட்டும் துணிச்சலைப் பெற்றிருக்கிறார். மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் மையக் கலைக்குழு சார்பாக ஊர் ஊராகச் சென்று, அங்கு நிலவும் சமூகச் சிக்கல்களை பாடலாகப் பாடிக் கொண்டிருக்கிறார். கோகோ கோலா நிறுவனத்தின் மோசடிகளைப் பாடலாகப்பாடி மக்களிடம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியவர். இவரது பாடல் பயணத்தில் பல துன்பங்களைச் சந்தித்திருக்கிறார். பாபர் மசூதி இடிப்பின்போது இந்து மதவெறிக்கு எதிராகப் பாடியபோது இராமேஸ்வரத்தில் ஆர்.எஸ்.எஸ். குண்டர்களால் மேடையிலேயே தாக்கப்பட்டிருக்கிறார். இராமநாதபுரத்தில் அதிமுக என்று சொல்லிக்கொண்ட சிலரால் கோவன் குழுவினர் தாக்கப்பட்டனர். அந்த வரிசையில் இன்று தேசத் துரோக வழக்கு.

கருத்துரிமை என்பது அரசியல் சட்டத்தில் குடிமக்களுக்கு கொடுக்கப்பட்ட அடிப்படை உரிமைகளுள் ஒன்று. எல்லோரையும் எல்லோரும் விமர்சிக்கிறார்கள். வலைதளங்களில் விஜயகாந்த், ஸ்டாலின், அன்புமணி போன்றோரை பல்வேறு வகைகளில் விமர்சிக்கிறார்கள். பொது வாழ்வில் இறங்கிவிட்ட எந்த ஒரு மனிதனும் விமர்சனத்தை தவிர்க்க முடியாது. விமர்சிக்காதீர்கள் என்று சொல்ல முடியாது. அப்படிச் சொல்ல வேண்டுமானால் சொந்தமாக தொழில் தொடங்கப் போக வேண்டுமே ஒழிய, பொதுமக்களிடம் சென்று, செய்யமுடியாது என்று தெரிந்திருந்தும் பல உறுதி மொழிகளைக் கொடுத்து வாக்கு சேகரிக்கச் செல்லக்கூடாது.

கோவன் இந்த நாட்டின் சொத்துகளைச் சூறையாடியவர் அல்ல. ஏழை மக்களின் உழைப்பில் வாழுகின்ற பணக்காரர் அல்ல. நாட்டில் ஏமாற்றப் படுகிற ஏழை எளிய மக்களின் நிலைகண்டு கொதித்தெழுந்து, அதை மாற்ற நினைக்கும் மனதுக்குச் சொந்தக்காரர். கோடி கோடியாய் ஊழல் செய்பவர்கள், அரசுச் சொத்துகளை அபகரிப்பவர்கள், வங்கிகளில் கடன் வாங்கி மனைவி, மக்கள் பேரில் எழுதி வைத்துவிட்டு என்னிடம் ஒன்றுமே இல்லை என்று ஏமாற்றுபவர்கள், நாட்டின் இரகசியங்களை வெளிநாட்டிற்கு விற்று பணம் பார்ப்பவர்கள் இப்படிப்பட்டவர்கள் தான் தேசத் துரோகிகளே தவிர, கோவன் தேசத் துரோகியல்ல.

சாதாரண மனிதன் மதுவால் மடிகிறானே, வசதியாக வாழ முடியாவிட்டாலும் பிறந்துவிட்டதற்காக உயிருடன் இருக்க வேண்டுமே என்ற மனித அடிப்படை எண்ணத்தில் பாடுகிறவர்தான் கோவனே தவிர தேசத் துரோகியல்ல. ஒன்றரை இலட்சம் பேரைக் கொன்றவனை சிவப்புக் கம்பளம் போட்டு வரவேற்கிற அரசுகளுக்கு இது தேசத் துரோகமாகத் தெரிகிறது போலும். எத்தனை தான் செய்தாலும், சிறை வைத்தாலும் அறம் என்பது ஒரே ஒரு முகத்தைக் கொண்டது. என்றுமே தோற்காத ஒரு உண்மை. அதனால்தான் தவறு செய்கிறவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள் என்றவாது ஒரு நாள். ●


## முற்றம் இதழுக்கான விளம்பரக் கட்டணங்கள்

பின்னட்டை பல வண்ணம் ரூ. 10,000/-
பின் உள் அட்டை பல வண்ணம் ரூ. 7,000/-
கருப்பு வெள்ளை முழுபக்கம் ரூ. 5,000/-
கருப்பு வெள்ளை அரைப் பக்கம் ரூ. 2500/-
க. வெ. கால் பக்கம் ரூ. 1500/-

சந்தா விவரம்: தனி இதழ் ரூ. 10/-
ஆண்டு சந்தா ரூ. 120/-

# ஜாஸ் சினிமாஸ் நிறுவனத்துக்கு கைமாறும் லக்ஸ் சினிமாஸ்

தமிழ்நாட்டில் திரையரங்குகள் நடத்துவதில் முன்னணியிலே உள்ள நிறுவனங்களில் ஒன்றான எஸ்.பி.ஐ.சினிமாஸ் நிறுவனம். வேளச்சேரியில் உள்ள ஃபீனிக்ஸ் வணிக அரங்கத்தில் உள்ள தங்களுடைய பதினோறு திரையரங்குகளையும் ஜாஸ் சினிமாஸ் நிறுவனத்துக்கு விற்பனை செய்துள்ளது.

இது தொடர்பாக மத்திய அரசின் கார்ப்பரேட் விவகாரத்துறை அமைச்சகத்தின் வலைதளத்தி லிருந்து தி இந்து ஆங்கில நாளிதழ் பெற்ற தகவலின்படி முன்னர் ஹாட்வீல்ஸ் இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட் என்ற பெயரில் இயங்கி வந்த நிறுவனம் தான் தற்போது ஜாஸ் சினிமா நிறுவனம் என்று பெயர் மாற்றம் பெற்றிருக்கிறது. ஹாட்வில்ஸ் இஞ்ஜினீயரிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் 2005ம் ஆண்டுதான் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக இயங்கத் தொடங்கியிருக்கிறது.

கடந்த 2014 ஜூலை 14ல் வி.கே.சசிகலா மாற்றும் அவரது உறவினர். ஜெ.இளவரசி ஆகியோர் தலைமையில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் தான் ஹாட் வீல்ஸ் இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட் என்ற பெயரை ஜாஸ் சினிமாஸ் என்று மாற்றம் செய்வது பற்றி முடிவெடுக்கப்பட்டு அமலுக்கு வந்துள்ளது.

தொடர்ந்து நடைபெற்ற அடுத்தக்கட்ட கூட்டத்துக்கு ஜெ.இளவரசி தலைமை வகித்தார். அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங் களை சசிகலா வழிமொழிந்துள்ளார்.

JAZZ CINEMAS



கீழே பதிரப்பட்டுள்ள குறிப்பானது இளவரசி தலைமையிலான கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு:

மேலும், மத்திய அரசு இணையத்தில் வெளியிடப்பட்டுள்ள ஆவணத்தை ஆராயும்போது ஜாஸ் சினிமாஸ் நிறுவனம் திரைப்பட தயாரிப்பு, விநியோகம், திரையிடல் என அனைத்து தொழில் களிலும் ஈடுபடலாம் என நிறுவன இணைப்பு கோப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது.

பதினோறு திரையரங்குகள் கொண்ட லக்ஸ் சினிமாஸ் நிறுவனம் சான்றிதழ்களைப் பெறுவதில் பல்வேறு இடையூறுகள் ஏற்பட்டது. அவற்றை யெல்லாம் சரிசெய்து. கடந்த மார்ச் மாதம்தான் திரைப்படங்களைப் பொது மக்களுக்குத் திரையிடத் தொடங்கியது.

இதற்கிடையில், லக்ஸ் சினிமாஸ் நிறுவனத்தை ஜாஸ் சினிமாஸ் வாங்கிவிட்டதாக பேச்சுகள் சலசலக்கப்பட்டது. இந்த சலசலப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக அண்மையில் ஒரு மாற்றம் நிகழ்ந்தது. எஸ்.பி.ஐ. சினிமாஸ் இணையதளத்தில் லக்ஸ் சினிமாஸ் அரங்கில் திரையிடப்படும் காட்சிகளை காண டிக்கெட் முன்பதிவு செய்ய முயன்ற வாடிக்கையாளர்கள் ஜாஸ் சினிமாஸ் இணையதளத்துக்கு மாற்றி விடப்பட்டனர். அப்போதுதான் ஜாஸ் சினிமாஸ் லக்ஸ் சினிமாஸுக்கு கைமாறியது அதிகாரபூர் வமாக அம்பலமானது.

இது குறித்து மேலும் தகவலறிய எஸ்.பி.ஐ .சினிமாஸ், ஜாஸ் சினிமாஸ் நிர்வாக அதிகாரிகளை தி இந்து தொடர்புகொள்ள முயன்றது. ஆனால் யாரும் அழைப்புகளை ஏற்கவில்லை.

கோலிவுட் வட்டாரத்தில் இதுகுறித்து விசாரித்த போது. இந்த ஒப்பந்தம் ஆண்டு முற்பகுதியிலேயே போடப்பட்டுவிட்டது. லக்ஸ் சினிமாஸில் 11 திரையரங்குகள் இருப்பதால் அதன் மதிப்பு பல கோடி இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

மத்திய அரசு இணையத்தளத்திலிருந்து பெறப் பட்ட ஆவணங்கள் சில விஷயங்களை தெளிவாக உறுதிப்படுத்துகிறது. அது, கார்த்திகேயன் கலிய பெருமாள் மற்றும் சிவக்குமார் கூத்தப்பார் சத்தியமூர்த்தி ஆகியோர் ஜாஸ் சினிமாஸ் நிறுவனத்தின் இயக்குநர்களான இவர்களே மிடாஸ் நிறுவனத்தின் இயக்குனர்களாகவும் இருக்கிறார்கள் என்பதே அது.

இந்த ஆண்டுத் தொடக்கத்தில் சென்னை யிலுள்ள பி.வி.ஆர்.திரைப்பட நிறுவனம். இந்த லக்ஸ் சினிமாஸ் திரைப்பட அரங்குகளை 600 கோடி ரூபாயிலிருந்து 1000 கோடி ரூபாய் வரை விலைக்கு வாங்க பேசப்பட்டது. ஆனால், அவற்றையெல்லாம் முறியடித்து ஜாஸ் சினிமாஸ் நிறுவனத்துக்கு கைமாறியிருக்கிறது லக்ஸ் சினிமாஸ். ●

## அரிய தகவல்

1. கூகுள் ஒரு நொடிக்கு 37,397 ரூபாய் வருமானம் ஈட்டுகிறது!! இந்த பதிவை படித்து முடிக்கும் முன்பே அது 1,86,987 ரூபாய் பெற்றிருக்கும்!

2.எக்ஸாமுக்கு போறதுக்கு முன்னாட என்னன்னு ஒரு பேப்பர்ல எழுதி வச்சா எக்ஸாம் ஈசியா இருக்குமாம்! சைகாலஜி

3.குள்ளமாக இருப்பவர்கள் உயரமாக இருப்பவர்களையும் விட இரண்டு ஆண்டுகள் கூடுதலாக வாழ்கிறார்கள்!

4.ஒரு சிகிரெட்டை புகைப்பது உங்க வாழ்நாளின் 11 நிமிடத்தை குறைக்கிறது!

5.நீங்கள் இடக்கை பழக்க முள்ளவராக இருந்தால் நீங்கள் கோவக்காரராகவும் எதிர்மறை உணர்வுகளுடையவரா கவும் இருக்கலாம்!

6.பிரபல மோனாலிசா ஓவியத்தில் மோனாலிசாவின் உதடுகளை வரைய லியானா–டோ–டாவின்சி 10 ஆண்டுகள்எடுத்துக்கொண்டாராம் !

# "காவிரி உரிமைக்கு நடிகர் சங்கம் குரல் கொடுக்காது"

## நடிகர் விசால் தவறான இம்முடிவைக் கைவிட வேண்டும்!

### தமிழ்த் தேசியப் பேரியக்கத் தலைவர் பெ. மணியரசன் வேண்டுகோள்!

பொதுத் தேர்தல் போல் முக்கியப் படுத்தப்பட்டு அண்மையில் நடந்த தென்னிந்திய நடிகர் சங்கத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய பொறுப் பாளர்கள் தங்களின் செயற்குழுக் கூட்டத்தை நடத்தி முடித்தபின், செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு நடிகர் சங்கப் பொதுச் செயலாளர் விசால் அளித்த விடை பேரதிர்ச்சி தருவதாக இருந்தது.

காவிரி போன்ற பொதுப் பிரச்சனைகளுக்காக நடிகர் சங்கம் போராட்டம் நடத்துமா? என்ற கேள்விக்கு இனிமேல் நடிகர்களுக்குரிய பிரச்சனைகள் தவிர காவிரி போன்ற வேறெந்த பிரச்சினையிலும் நடிகர் சங்கம் தலையிடாது என்றார் விசால்.



தமிழ்நாட்டிற்கு சட்டப்படி தர வேண்டிய காவிரி நீரைத் திறந்து விடக்கூடாது என்று கோரிக்கை வைத்து கர்நாடகத்தில் அவ்வப்போது நடிகர் சங்கம் போராட்டத்தில் ஈடுபடுகிறது. ஆனால் தமிழ்நாடு நடிகர் சங்கம் சட்டப்படி திறந்து விட வேண்டிய காவிரி நீரைத் திறந்து விடுமாறு கர்நாடகத்தை வலியுறுத்தி அறவழிப் போராட்டங்களை நடத்தாது என்றால் அதன் பொருள் என்ன?

தமிழ்நாட்டு மக்களைப் பாதிக்கும் பிரச்சினைகளை இனி விசால்

நாசர் தலைமையில் உள்ள நடிகர் சங்கம் கண்டு கொள்ளாது, ஒதுங்கிக்கொள்ளும் என்று தானே பொருள்.

சென்னையில் உள்ள திரைப்பட மற்றும் நாடகக் கலைஞர்கள் உட்பட இலட்சோப லட்சம் மக்களுக்குக் குடிநீராகக் காவிரி நீர் அன்றாடம் பயன்படுகிறது. காவிரி நீரில் உற்பத்தியாகும் உணவுப் பொருள் பயன்படுகிறது.

இவற்றையெல்லாம் விட, தமிழ்நாட்டு மக்களின் பேராதவரால் தான் தமிழ்நாட்டுத் திரைத்துறை செழிப்பாக இருக்கிறது.

அதையும் விடக் கலைஞர்களுக்கு சமூக அக்கறை மிகமிகத் தேவை என்பது உலகம் ஒப்புக்கொண்ட உண்மை!

இந்நிலையில் காவிரிப் பிரச்சினை போன்ற தமிழ்நாட்டு மக்களின் பிரச்சினைகளுக்குத் தமிழ்நாட்டு நடிகர் சங்கம் முகம் கொடுக்காது என்பது சமூகப் பொறுப்பற்ற செயல் மட்டுமல்ல, மறைமுகமாக கர்நாடகத் திரைக்கலைஞர்களின் காவிரி மறுப்பு இனவெறிக்குத்துணை போவதாக வும் அமையும்.

எனவே விசால் நாசர் தலைமையில் உள்ள நடிகர் சங்கம் தனது முடிவை மறு ஆய்வு செய்ய வேண்டும்.

அடுத்து தென்னிந்திய நடிகர் சங்கம் என்பதைத் தமிழ்நாடு நடிகர் சங்கம் என்று மாற்ற முடியாது என்றும் அந்நேர்காணலில் விசால் கூறியுள்ளார். இதுவும் தமிழ்நாட்டிற்குச் செய்யும் துரோகம் ஆகும். விசாலின் சொந்த மாநிலமான ஆந்திரப் பிரதேசத்தில் ஆந்திர நடிகர் சங்கம் என்று வைத்துக்கொண்டு தமிழ்நாட்டில் மட்டும் தென்னிந்திய நடிகர் சங்கம் என்று தான் இருக்கும் என்பது தமிழினத்திற்கு செய்யும் துரோகமாகவே கருதப்படும்.

நாசர். கருணாஸ். பொன்வண்ணன். கார்த்தி போன்ற தமிழ்நாட்டுக் கலைஞர்கள் பொறுப்பில் இருக்கும் போது இவ்வாறாக தமிழர் உரிமைக்கு எதிரான முடிவுகளை நடிகர் சங்கம் எடுக்கக் கூடாது என்றும் மேற்கண்ட இரு முடிவுகளையும் மாற்றி அமைக்க வேண்டும் என்றும் தென்னிந்திய நடிகர் சங்கப் பொறுப்பாளர் அனைவரையும் தமிழ்த்தேசியப்பேரியக்கம் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவ்வறிக்கையில் வெளியிடப் பட்டுள்ளது.

●

---

## இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள சித்ரவதை கூடம்

இலங்கைத் தீவில் காணாமல் போனவர்கள் குறித்து விசாரிப்பதற்காகச் சென்ற ஐ.நா.வின் விசாரணைக் குழுவின் தலைவரான கனடாவின் பெர்னார்டு துஹைம் மற்றும் அர்ஜென்டைனா நாட்டின் ஏரியல் துருக்கி, தென்கொரியாவின் தவ்–உவ்–பெய்க் ஆகியோர் புதன்கிழமை வெளியிட்டு இருக்கின்ற தகவல் அதிர்ச்சி அளிக்கிறது.




இலங்கை கிழக்கு மாநிலத்தில் உள்ள திரிகோணமலை மாவட்ட கடற்படை தளத்துக்கு உள்ளே ஒரு சித்திரவதைக் கூடம் ரகசியமாக செயல்பட்டு வந்தது என்பது தான் ஐ.நா. குழு கண்டறிந்த உண்மைகளில் மிகவும் முக்கியமானதாகும்.

இலங்கைப் போர் முடிந்து ஓராண்டு வரை இந்த சித்திரவதைக் கூடம் செயல்பட்டு வந்ததாகவும், அங்கு ஏராளமானவர்கள் சித்திரவதை செய்யப்பட்டதற்கான அறிகுறிகள் தென்படுவதாகவும் ஐ.நா. குழு தெரிவித்துள்ளது.

2010க்குப் பிறகும் ஈழத் தமிழர்கள் அங்கு தொடர்ந்து சித்திரவதை செய்யப்பட்டதை நிரூபிப்பதற்குப் போதிய ஆதாரங்கள் உள்ளன, சுவர்களில் படிந்துள்ள இரத்தக் கறைகள், கை ரேகைகள், ஈழத் தமிழர்கள் தொடர்ந்து அந்த அறைகளில் சித்திரவதை செய்யப்பட்டு இருக்கின்றார்கள்,

மிகக் குறுகிய காலமே விசாரணை நடத்த அனுமதிக்கப்பட்டதால் முழு உண்மைகளை வெளிக்கொண்டு வர முடிய வில்லை என்றும் இதுபோல இன்னும் பல இடங்களில் சித்திரவதை முகாம்கள் இருப்பதற்கான வாய்ப்பு உள்ளன என்றும், அந்தக் குழு தெரிவித்து இருக்கின்றது.

இதுகுறித்து முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அக்குழு கூறியுள்ளது.

மேலும்,

"நாங்கள் அறிந்த மட்டிலுமே 20,000 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இப் பகுதியில் காணாமல் போயிருக்கின்றனர்" என்றும் அவர்கள் கூறி உள்ளனர். இலங்கைத் தீவில் இனப்படுகொலை தொடர்ந்து நடைபெறுகிறது என்பதற்கு மேலும் ஒரு ஆதார சாட்சியாக மூவர் குழுவின் தகவல்கள் அமைந்துள்ளன.

●

# டெங்கு


டெங்குக் காய்ச்சலுக்கு மிக நீண்ட வரலாறு உண்டு. வரலாற்றில் சீனாவில்தான் முதன் முதலாக இந்த நோய் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. 1635 ஆம் ஆண்டு மேற்கு இந்தியத் தீவில் மிகப்பெரிய தொற்றுநோய் ஏற்பட்டதாகவும் அது டெங்கு என்றும் பின்னாளில் கூறப்பட்டது. 1779 80 ல் ஆசியா, வட அமெரிக்கா, ஆப்பிரிக்கா போன்ற கண்டங்களில் இந்த நோய் தொற்று நோயாகப் பரவிய போது, இது டெங்கு என்று உறுதிப்படுத்தப்பட்டது. அப்போது இந்த நோயை ஆராய்ந்த பெஞ்சமின் ரஷ் என்ற அமெரிக்கர் இதை “எலும்பு முறிப்பு நோய்“ என்றார்.

திடீர்க்காய்ச்சல், தலைவலி, ஈறுகளில் குருதி வடிதல், வயிற்றுக்கடுப்பு, குருதிப்போக்கு, தசை மூட்டுவலி, வாந்தி, கல்லீரல் வீக்கம், தாழ் குருதி அழுத்தம் போன்ற அறிகுறிகள் இருந்தால், டெங்குக் காய்ச்சல் என்று முடிவு செய்ய வாய்ப்பு இருப்பதாகச் சொல்கிறார்கள். தமிழகத்தில் இந்த நோய் பலபேரை பலி கொண்டுவிட்டது. அரசு இந்த நோய் அழிக்க தீவிரமாக பணியாற்றவில்லை என்ற பேச்சு இருக்கிறது. அதே நேரத்தில் இந்த நோய் கண்டவர்களை அனுமதிக்கும் மருத்துவமனை களுக்கு, நோயைக் கண்டறிந்த மருத்துவர்களுக்கு இந்த நோயை டெங்கு என்று பதிவு செய்யக்கூடாது என்ற வாய்மொழி உத்தரவு அரசால் போடப்பட்டிருப்பதாகப் பேசப்படுகிறது. அதையும் மீறி டெங்குவால் இறந்தவர்கள் என்ற பட்டியல் பெரிதாகத்தான் இருக்கிறது.

குழந்தைகள், சிறுவர்களை இந்த நோய் விரைவாக தாக்குவதாகத் கூறுகின்ற னர். ஆண்களை விட பெண்களை இந்த நோய் அதிகமாகத் தாக்குவதாகவும் சொல்லப்படுகிறது. இந்த நோய்க்கு மருந்துகள் இல்லை என்றும் சில ஆங்கில மருந்துகள் உண்டு என்றும் கூறுகின்றனர். ஆனால் நமது தமிழ் மருத்துவமோ, என்னிடம் மருத்துவம் உண்டு என்று சொல்கிறது. தமிழ் மருத்துவத்தைப் பயன்படுத்துவதன் மூலமே இந்நோய் குணமாக்கப் படுகிறது என்பது எல்லோரும் அறிந்ததாகக் காணப்படுகிறது. நிலவேம்பு குடிநீர், பப்பாளி இலைச்சாறு, மலைவேம்பு சாறுகளை காலை, மாலை இரண்டு வேளை குடித்து வர, டெங்குவுக்கு எதிரான சக்தி கூடி, நோய் விரட்டப்படுகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக இந்த நோக்குக் காரணமான கொசுக்கள் பரவுதலை நாம் தடுக்கும்விதமாக சுற்றுப்புறங்களை சுத்தமாகவும் நீர் தேங்காத வண்ணமும் பார்த்துக் கொள்வது அவசியமாகிறது. சுற்றுப்புறச்சூழல் சுத்தமாக இருந்தால் எந்நோயும் நம்மை அண்டாது..

**- வேர்மகள்**



# மழையில் மூழ்கும் தமிழகம்



வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையால் சென்னை உள்ளிட்ட கடலோர மாவட்டங்களில் அடைமழை கொட்டிவருகிறது. தாழ்வான பகுதிகளை வெள்ளநீர் சூழ்ந்துள்ளது. சென்னையின் புறநகர் முழுவதும் தண்ணீர் தேசமாக மாறியுள்ளது. மொட்டைமாடிகளில் தஞ்சமடைந்துள்ள மக்களை ஹெலிகாப்டர் மூலம் மீட்க தேசிய பேரிடர் மீட்புக்குழுவினர்முயற்சி செய்து வருகின்றனர். அடித்து துவைத்து வரும் அடைமழையால் சென்னைவாசிகள் ஆடித்தான் போயுள்ளனர்.

ஏய் யாருக்கு வேணும் தண்ணீ... கர்நாட காவுக்கா...கேரளாவுக்கா வாங்கடா... வாங்கடா.... என்று மீம்ஸ் போட்டு கலக்குகின்றனர். "மழை வெள்ளத்தை சபிக்காதீர்கள்.... திருடப்பட்ட தன் ஏரிகளையும், குளங்களையும் தேடி அவை அலைகின்றன" என்று கவிதையாய் வாட்ஸ் அப்பில் ஆறுதல் சொல்லுகின்றனர் சிலர்.

தாழ்வான பகுதியான வேளச்சேரி சபிக்கப்பட்ட பகுதியாக மாறியுள்ளது. வெள்ளம் சூழ்ந்த வெள்ளம் சூழ்ந்த வேளச்சேரி வேளச்சேரியில் அனைத்து தெருக்களும் தண்ணீரால் சூழப் பட்டுள்ளன. கடந்த சில நாட்களாக அப்பகுதி மக்கள் வீடுகளுக்குள் மூடங்கி இருந்த நிலையில் தீயணைப்பு துறையினர் படகுகள் மூலம் அங்கு மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இனிமே படகுதான் 2/8 இனிமே படகுதான் 6 அடிஉயர மழைநீரில் மக்கள் பரிதவிக்கும் காட்சிகள் ஊடகங்களில் வெளியாகி 'உச்' கொட்ட வைக்கின்றன.

தென்சென்னையின் மடிப்பாக்கம், ராம் நகரில் அத்தியாவசியப் பொருட்கள் வாங்க பொதுமக்கள் படகுகளில் செல்கின்றனர். போக்குவரத்து நிறுத்தம் 3/8 போக்குவரத்து நிறுத்தம் சாலைகளில் வெள்ள நீரால் வேளச்சேரிதாம்பரத்தில் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது. ஆதம்பாக்கம் சுரங்கப் பாதையில் வெள்ளம் சூழ்ந்துள்ளதால் போக்கு வரத்து முடங்கியுள்ளது.

மொட்டைமாடிகளில் தஞ்சம் 4/8 மொட்டை மாடிகளில் தஞ்சம் இதேபோல் சென்னை பழைய







பெருங்குளத்தூரில் 50 குடும்பங்கள் மழை நீரில் தவித்து வருகின்றனர். வரதராஜபுரம் குடியிருப்பு பகுதியில் 10 அடிக்கும் மேல் தண்ணீர் சூழ்ந் துள்ளது. வீட்டின் மாடிகளில் தஞ்சம் அடைந் துள்ள 50க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தத்தளித்து வருகின்றனர். முட்புதர்கள் சூழ்ந்த பகுதி 5/8 முட்புதர்கள் சூழ்ந்த பகுதி புறநகர் பகுதிகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாக கான்கிரீட் கட்டிடங்கள் கண்களுக்குத் தட்டுப்படுகின்றன. தரை தளங்களை வெள்ளநீர் சூழ்ந்துள்ளதால் பாம்புகளுக்கு பயந்து குடியிருப்பு வாசிகள் மொட்டைமாடிகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

ஹெலிகாப்டர் மூலம் மீட்பு 6/8 ஹெலிகாப்டர் மூலம் மீட்பு தவிக்கும் மக்களை மீட்க படகுகளை பயன்படுத்த முடியாத பகுதிகளில் ஹெலிகாப்டர் மூலம் மீட்க முயற்சி செய்கின்றனர் தேசிய பேரிடர் மீட்புக்குழுவினர். ஆனாலும் பயனில்லை. விடாமல் பெய்து வரும் மழையால் மக்கள் கைகளை ஆட்டி அழைத்தும் இறங்கமுடி யாமல், மக்களை மீட்க முடியாத நிலை ஏற்பட்டது.




தொடரும் கனமழை 7/8 தொடரும் கனமழை கிருஷ்ணா புரம் பகுதிகளில் வெள்ளநீரை வேடிக்கைப் பார்த்துக்கொண்டு வேதனையோடு நின்று கொண்டி ருக்கின்றனர். கனமழை 24 மணிநேரத்திற்கு நீடிக்கும் என்று கூறியுள்ள நிலையில் கடந்த 4 நாட்களாக தூக்கம் தொலைத்து உணவு, குடிநீர் இன்றி தண்ணீர் தேசத்தில் சிக்கி தவித்து வருகின்றன சென்னை புறநகர்வாசிகள்.

மக்களை அச்சுறுத்தும் மழைக்கால நோய்கள்.... வந்த பின் தப்பிப்பது எப்படி? நம்ம பக்கத்து வீட்டில் ஒரு பெரிய்ய "இருட்டு"ப் பையன் ஒளிஞ்சிருக்கான்.. நாசா தகவல் ரியல் எஸ்டேட் திருடர்களால் காணாமல் போன சென்னை ஏரிகள் நகரை மூழ்கடித்த வெள்ளம்..! பெய்த கனமழையால் சென்னையில் ஏரிகளும், குளங்களும் நிரம்பியுள் ளன, எங்கு பார்த்தாலும் தண்ணீர் மயம்... ஆனால் சென்னை புறநகர்வாசிகளுக்கோ குடிக்க தண்ணீர் இன்றி தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. பேருந்துகள் தண்ணீரில் ஊர்ந்து போக... சாலைகளில் வெள்ளத்தில் படகுகள் மூலம் மக்கள் மீட்கப்பட்டு வரும் பரிதாப காட்சிகளையும் காண முடிகிறது.

தொடர் மழை காரணமாக சென்னை மாநகரம் வெள்ளத்தில் மிதக்கிறது. திரும்பிய திசை எல்லாம் வெள்ளக்காடாக காட்சி அளிக்கிறது. சென்னை யின் தெற்குப்பகுதி தனித்தீவாகவே மாறிவிட்டது. நகரின் பெரும்பாலான இடங்களில் பெருத்த சேதம் ஏற்பட்டுள்ளது. நகர் பகுதிகளில் ஆற்றின் கரையோரம் குடிசைகளில் வசிப்பவர்களின் நிலை மட்டுமல்ல புறநகர் பகுதிகளில் பல லட்சம் செலவு செய்து வீடுகட்டியவர்களும், ப்ளாட் வாங்கியவர்



களின் நிலையும் இன்றைக்கு அந்தோ பரிதாபமாக இருக்கிறனது.

வெள்ளம் வந்திருக்கு தண்ணியில பாம்பு வருதே என்று புலம்பவர்களின் நிலை அந்தோ பரிதாபமாக இருக்கிறது. நகர்பகுதிகளில் அரசியல் கட்சியினர் சமைத்த உணவு வழங்கி ஒரு வழியாக நிலைமையை சமாளிக்கின்றனர் ஆனால், உணவுக்குக் கூட வழியில்லாமல் தவிக்கிறார்கள் சென்னை புறநகர்வாசிகள்.

வீடுகளில் தண்ணீர் சூழ்ந்திருக்க... கடைகளும் மூடப்பட்டிருக்க சமைத்து சாப்பிடவும் முடியாமல், உணவு விடுதிகளிலும் வாங்கி சாப்பிட முடியாதல் தவிக்கின்றனர்.

**கடலூர் கடலானது:**

ஒவ்வொரு வருடமும் மழையின் முன்னால் நாம் தோற்று போகிறோம். தமிழகத்தில் மழையின் காரணமாக உயிரிழந்தவர்களில் 30 பேர் கடலூரை சேர்ந்தவர்கள். பேரிடர் மேலாண்மை நிபுணரும் வி.ஐ.டி பிசினஸ் ஸ்கூல் பேராசிரியரு மான சுரேஷ் மரியசெல்வம் கடலூரில் ஏற்பட்டிருக்கும் இந்த இயற்கை சீற்றத்தை பற்றி கூறும்போது, "எந்த

மாவட்டத்தில் அதிகமாக பேரிடர் மேலாண்மை மற்றும் இயற்கை சீற்றங்கள் பற்றி விழிப்புணர்வு செய்தோமோ அங்குதான் எப்போதும் அதிக அளவிலான சேதங்கள் ஏற்படுகின்றன", என்று வருத்தத்துடன் கூறுகிறார். இன்னும் நிறைய



கேள்விகளுக்கு சுரேஷ் மரியசெல்வத்தின் பதில்கள் இதோ:

ஏன் தானே புயலில் இருந்தும், கடந்த சில வருடங்களில் ஏற்பட்ட இயற்கை சீற்றங்களில் இருந்தும் தமிழகம் பாடம் கற்றுக்கொள்ளவில்லை?

தமிழக அரசுடன் சேர்ந்து பல கருத்தரங்குகள், பயிற்சிகள் மற்றும் ஆலோசனைகள் இதையெல் லாம் செய்தாலும் அந்த காலகட்டம், அதாவது மழைக்காலம் வரைதான் அதைபற்றி பேசுகிறோம். மழைக்காலம் முடிந்தவுடன் அதை எல்லோரும் மறந்துபோய் விடுகிறோம். எல்லோரும் மழைநீரை எப்படி அப்புறப்படுத்தணும்னு பாக்குறாங்களே தவிர எப்படி மழைநீரை சேமிக்கிறதுன்னு யோசிக்க மாட்றாங்க.

**மழைநீர் சேமிப்பு பற்றி தமிழகத்தில் போதிய விழிப்புணர்வு இருக்கிறதா?**

ஒரு சமுதாயமா எல்லோரும் சேர்ந்துதான் மழைநீர் சேமிப்பை சாத்தியப்படுத்த முடியும். நீர்வள ஆதாரங்களை பாதுகாக்கணும். குப்பை கூளங்கள் சேர்கிற இடத்தில் மழைநீர் அதிகமாக சேரும். உதாரணத்துக்கு பூந்தமல்லி போன்ற வளர்ந்து வரும் ஏரியாவில் அதிகமான குப்பை கூளங்கள் சேர்ந்துச்சு. உடனேயே, கமிஷ்னர்கிட்ட புகார் கொடுத்து, குப்பை சேர்ற இடத்தை டிஜிட்டல் மயப்படுத்தி குப்பைகள் தேங்குற இடத்தை கண்டறிந்து அப்புறப்படுத்தினோம். இப்பொழுது ஓரளவு அங்கே மழநீர் தேங்குறது இல்லை. அடையார் போன்ற இடங்களில் குப்பைகளை எல்லாம் கூவ நதியில் தூக்கி எறிகிறோம். அங்கு

நிறைய மழைநீர் தேங்குகிறது. சமூகம் சார்ந்த ஒரு பேரிடர் மேலாண்மை விழிப்புணர்வு நமக்கு ஏற்படணும். தமிழகத்தில் மழைநீர் சேகரிப்பை கட்டாயப்படுத்தினாங்க. ஆனால், அதை அரசாங்கம் முறைப்படுத்தல. அடுக்கு மாடி கட்டிடங்களில் எல்லோரும் சேர்ந்து எளிதாக மழைநீர் சேகரிப்பை செய்யலாம்.

**நம்முடைய சுற்றுப்புறம் எந்த அளவுக்கு மழையினால் ஏற்பட்ட சேதங்களுக்கு காரணம்?**

பிளாஸ்டிக் ரொம்ப முக்கியமான காரணம். ஜூன் மாதமே குப்பை கூளங்களை எல்லா இடங்களிலும் அப்புறப்படுத்தினால் இந்த பிரச்சனை ஓரளவு தீரும். சுனாமி ஏற்பட்ட போதே மழைநீர் சேகரிப்பை வலியுறுத்தி பல அறிவுறுத்தல்களை அரசாங்கத்திற்கு சொன்னோம். ஆனால், இத்தனை வருடங்கள் கழித்தும் எந்த மாற்றங்களும் நிகழவில்லை. எதிர்பாராமல் வரக்கூடிய மழையையோ புயலையோ எதிர் கொள்ள கூடிய தொழில்நுட்பம் நம்மிடம் இருந்தாலும் அதை செயல்படுத்தவில்லை என்பதுதான் உண்மை.

**பருவநிலை மாற்றம் இந்த சேதாரங்களுக்கு முக்கிய காரணம்தானே?**

கடந்த நான்கு வருடங்களாக நமக்கு சரியான பருவமழையே இல்லை. இப்பொழுது காற்றழுத்த தாழ்வுநிலை ஏற்பட்டுள்ளதால் இவ்வளவு மழை பதிவாகியிருக்கு. ஆனால், இது பருவமழையினால் ஏற்பட்ட மழை இல்லை. இது பருவ மாற்றத்தினால் ஏற்பட்ட ஒன்றுதான். ஆனால், எந்த காரணத் தினால் மழை பெய்தாலும் மழைநீரை சேமித்து வைக்க வேண்டிய வழிகளை நாம் ஆராய வேண்டும். அரசாங்கம், என்.ஜி.ஒ, சமூகம் எல்லோரும் சேர்ந்துதான் இதை நினைவாக்கணும்.

**மழைநீர் சேமிப்பு பற்றிய விழிப்புணர்வை எப்படி மக்களுக்கு ஏற்படுத்துவது?**

சென்னையில் எல்லோரும் வேற வேற மாவட்டங் களில் இருந்து வருபவர்கள். அவர்களில் பெரும்பாலானோர் மழைநீரை சேமிக்க மாட்டாங்க. மாணவர்கள் இதை ஒரு பெரிய இயக்கமாக உருவாக்கி செயல்படுத்த வேண்டும். நம்முடைய மழைநீரை சேமிக்கிறது நம் அடுத்த சந்ததிகளுக்கு சேர்த்து வைக்கிற ஒரு பொக்கிஷம். இதை அரசாங்கமும் மக்களும் ஒரு பெரிய விசயமாக எடுத்துக்கொள்வதில்லை. கடலூரில் மட்டும் 300 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தினோம்.

ஆனால், அங்குதான் வருடந்தோறும் இவ்வளவு சேதாரங்கள் ஏற்படுகின்றன. இதுதான் எங்களுக்கு புரியவே இல்லை. கடலூரில் சுனாமி அப்பவும் சரி, அதற்கு பின் வந்த மழை, புயல் எதுவாக இருந்தாலும் எங்கு அதிகமான சேதங்கள் ஏற்பட்டதோ, அங்குதான் அதிகமான சேதாரங்கள் இப்பவும் ஏற்பட்டிருக்கு. மழை சேதாரங்கள் ஏற்படும்போது கடவுளை குற்றம் சொல்லுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும். இந்த மாதிரியான மூட பழக்கங்களை புறந்தள்ளி விட்டு செயலில் இறங்க வேண்டும்.

**நீர்நிலைகளை கொஞ்சம் கொஞ்சமா அழிச்சுட்டு வர்றோம். இது எப்படி மழைநீர் சேதாரங்களுக்கு காரணமாகிறது?**

இருக்குற தண்ணீர் வளத்தை எப்படி பாதுகாப்பது என்பதில் தமிழ்நாடு ரொம்ப பலவீனமாக இருக்கு. 'வருமுன் காப்பதே நல்லது' என்பதன் படி, தமிழ்நாடு செயல்படவே இல்லை. முன் தயாரிப்புக்காக செலவழிக்கிற ஒரு டாலர், சேதம் வந்ததற்கு பின் செலவழிக்கு ஏழு டாலர்களுக்கு சமம்.

இந்த வாக்கியத்தை செயல்படுத்துனாலே பாதி பிரச்சனை தீர்ந்துடும். அரசாங்கம் மீட்புபணிதான் செய்யும். மக்கள்தான் முன்வந்து இதனை செயல்படுத்த வேண்டும். ஆற்றில் மணல் அள்ளுவதை கொள்கை அளவில் மாற்றங்கள் கொண்டு வந்து தடுக்க வேண்டும். ஆனால், இந்த திட்டங்களை நடைமுறைப் படுத்துவதில் சில சிக்கல்கள் உண்டு. ஆனால், அதை எல்லாம் சரிசெய்து செயல்படுத்த முனைய வேண்டும்.

சுரேஷ் மரியசெல்வம் சொல்வது போல், அரசாங்கமும் சமூகமும் மழைநீர் சேகரிப்பை முன்னெடுத்து செயல்படுத்தும் போது இந்த மாதிரியான இயற்கை சீற்றங்களை சமாளிக்க முடியும்.

அரசாங்கமும், பேரிடர் மேலாண்மை நிபுணர்களின் ஆலோசனைகளை ஏற்று சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ●

# அனைத்து இந்திய பத்திரிகை ஆசிரியர் வெளியீட்டாளர் சங்கத்தின் தலைமை அலுவலகத் திறப்பு விழா!








எண்.55, ஜெய்நகர் 6வது தெரு வளசரவாக்கம், சென்னை 600 087 என்ற முகவரியில் அனைத்து இந்திய பத்திரிகை ஆசிரியர் வெளியீட்டாளர் சங்கத்தின் தலைமை அலுவலகத்தை சங்கத்தின் நிறுவனரும் தலைவருமான டாக்டர் எஸ். இராஜேந்திரன் அவர்கள் திறந்து வைத்தார். மாநில, மாவட்ட நிர்வாகிகள், உறுப்பினர்கள், பத்திரிகை யாளர்கள், செய்தியாளர்கள், ஆசிரியர்கள், வெளியீட்டாளர்கள், நண்பர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். வந்திருந்த அனைவரையும் மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்தி, அவர்கள் அனைவருக்கும் பொன்னாடை அணிவித்து சிறப்பித்தார் தலைவர் டாக்டர் எஸ். இராஜேந்திரன் அவர்கள்.

மாநிலத் துணைத்தலைவர்கள் ஆர். மகாதேவன், மெரியன், செயலாளர் ரஞ்ஜித்குமார், துணைச்செயலாளர் பன்னீர்செல்வம், துணை அமைப்புச் செயலாளர் விசவனூர் வே. தளபதி, பொருளாளர் ஆர். சாந்தகுமாரி, தேசிய ஆட்சிமன்றக் குழுத்தலைவர் சாந்தாராம், செயற்குழு உறுப்பிர்கள் வேலு, நந்தகோபால், இரத்தினவேல், பாண்டியன், கலைஞானி, தென்சென்னை மாவட்டத்தலைவர் தாமஸ், வடசென்னை மாவட்டச் செயலாளர் மதன்குமார் கே. எ. ஜெயச்சந்திரன், சரவண அரவிந்தன், புதுவை மாநில பொதுச்செயலாளர் சிவக்குமார், தர்மபுரி மாவட்டத் தலைவர் முருகேசன், மார்த்தாண்டம் அலெக்சாண்டர், தென்சென்னை மாவட்டச் செயலாளர் டேவிட் இன்பராஜ், புகைப்படைக் கலைஞர்கள் பிரசாத், மண்ணையா, நீதியைத்தேடி தலைமைச் செய்தியாளர் ஜே. தயாளன் விழாவில் பங்கு கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

நிறைவாக சிறப்பான சிற்றுண்டியும், பரிசுப்பொருளும் தந்து, அனைவரையும் மகிழ்வுட னும் நம்பிக்கையுடனும் வழியனுப்பினார் சங்கத்தின் நிறுவனரும் தலைவருமான டாக்டர் எஸ். இராஜேந்திரன் அவர்கள்.

# பூக்கள்

பாவலர் சீனி. சுந்தரமூர்த்தி.



'பைவோஸ் டாச்யா
பும்புசோடஸ்' என பெயர்
கொண்ட மூங்கில் மரம்
மணக்கின்ற மலராய்
நூற்று இருபது ஆண்டுக்கு
ஒரு முறை பூக்குமே!

'செக்கோயா' மரமானது
நூற்று எழுபத்தைந்து
தொடங்கி இருநூறு
ஆண்டுக்குள் பூப்
பூக்குமே ஒருமுறை!

எண்பது முதல் நூற்று
ஐம்பது ஆண்டுக்குப் பிறகு
பூப் பூக்குமே
பொலிவியா நாட்டில்
'பூயாரெய் மண்டி'
தாவரமே!

வைரவிழா கொண்டாடி
மலர்கின்ற மலர்
'தாழிப் பனை'

பவழ விழா கொண்டாடி
பாசத்தைப் பொழிவது
'காக்டஸ்'

வாழ்நாளில் வசந்தம்
மலர வகை செய்யும்
'பூமோனா கார்பிக்'

உலகத்தில் ஐம்பது
சதவீத பூப் பூக்கும் நாடு
'தென் ஆப்பிரிக்கா'

பதினைந்து ஆண்டுக்கொரு
முறை அழகாய்ப பூத்திடும்
பூ 'லிம்பா'

பன்னிரண்டு ஆண்டுகளில் பூக்கும்
'குறிஞ்சிப் பூ' நிறமோ நீலம்.



கூடுதல் செலவு இல்லாததால் சாதாரண மக்களும் எளிதாக மக்கள் நீதிமன்றம் (லோக் அதாலத்) சென்று தங்கள் வழக்குகளை சமாதான அடிப்படையில் முடிக்கின்றனர். சமரசம் என்ற மற்றொரு மாற்றுமுறை தீர்வு குறித்து விழிப்புணர்வு ஏற்பட்டு வருவதால் அதற்கும் மவுசு அதிகரித்துள்ளது.

சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட, சண்டைக்காரன் காலில் விழுவது மேல் என்ற பழமொழி பலருக்கும் தெரிந்திருக்கும். சமாதானத்தை வலியுறுத்தும் இப்பழமொழியை வழக்காடிகள் ஏராளமானோர் இப்போது புரிந்து கொண்டுள்ளனர். அதனால்தான், உயர் நீதிமன்றம் மற்றும் கீழமை நீதிமன்றங்களைத் தவிர்த்து, மக்கள் நீதிமன்றத்தை நோக்கி சாதாரண மக்கள் படையெடுக்கின்றனர்.

உரிமையில் விசாரணை முறைச் சட்டப்பிரிவு 89ன் கீழ், நீதிமன்றம் தன்னிடம் நிலுவையில் உள்ள ஒரு வழக்கை சமரசமாக பேசி முடிப்பதற்கு வழக்காடிகளின் மனு அடிப்படையிலோ தன்னிச்சையாகவோ சமாதான முறையில் தீர்வு காண மக்கள் நீதிமன்றத்துக்கு அனுப்பலாம். சட்டப்பணிகள் ஆணைக் குழு பிரிவு 19ன் படி மக்கள் நீதிமன்றம், 3 பேர் கொண்ட அமர்வாக இருக்கும். அதில் ஒருவர் பணியில் இருக்கும் அல்லது ஓய்வு பெற்ற நீதிபதி, மற்றொருவர் சமூக நலப் பணியாளர் அல்லது பொது நல ஊழியர், மூன்றாம் நபர் வழக்கறிஞர்.

மக்கள் நீதிமன்றத்தில், நீதிமன்றத்தின் நிலுவை வழக்குகள் மட்டுமல்லாமல், நீதிமன்றத் துக்கு வருவதற்கு முந்தைய நிலையில் உள்ள வழக்குகளும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் படுகின்றன. வாகன விபத்து இழப்பீடு கோரும் வழக்குகள், வங்கித் தாவா, தொலைபேசி மற்றும் செல்போன் நிறுவன விவகாரங்கள், ஓய்வூதியப் பிரச்சினைகள், காசோலை வழக்குகள் போன்றவை சமாதான மாகப் பேசி தீர்வு காணப்படுகின்றன.

# மக்கள் நீதிமன்றம் சமரச தீர்வு முறை



மக்கள் நீதிமன்றத் தீர்ப்பு, நீதிமன்றத் தீர்ப்புக்கு ஒப்பானது என்பதால் அதை எதிர்த்து மேல் முறையீடு செய்ய முடியாது. இதன் தீர்ப்பை சட்டப்படி நிறைவேற்ற முடியும். மக்கள் நீதிமன்றத்துக்கு தனியாக கட்டணம் செலுத்தத் தேவையில்லை. ஏற்கெனவே நீதி மன்றக் கட்டணம் செலுத்தி வழக்கு தொடர்ந்திருந்தால், அக்கட்டணம் திருப்பித் தரப்படும்.

நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கையைக் குறைப்பதில் மக்கள் நீதிமன்றம் பெரும் பங்கு வகிக்கிறது. கடந்த முறை தமிழகம் முழுவதும் நடைபெற்ற மக்கள் நீதிமன்றத்தில் 23 ஆயிரம் வழக்குகள் முடிக்கப்பட்டு, ரூ.308 கோடி சம்பந்தப்பட்டவர் களுக்கு தீர்வுத் தொகையாக வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

வணிகம் மற்றும் ஒப்பந்தம் தொடர்பான விஷயங்கள், சொத்து பிரச்சினை, பங்குதாரர்கள் தகராறு, திருமணம் மற்றும் குழந்தை பாதுகாப்பு உள்ளிட்ட,குடும்ப விவகாரங்கள், குடும்ப வர்த்தகப் பிரச்சினைகள் போன்றவை மத்தியஸ் தர் மூலம் 90 நாட்களில் தீர்வு காணப்படுகின்றன. சமரசத் தீர்வை எதிர்த்து மேல்முறையீடு செய்ய முடியாது.

இதுகுறித்து தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழு உறுப்பினர் செயலாளர் ஆர்.எம்.டி.டீக்காராமன் கூறும் போது, உயர் நீதிமன்ற வளாகத்தில் 2005ஆம் ஆண்டு ஏப்ரல் 9ஆம் தேதி தமிழ் நாடு சமரச மையம் தொடங் கப்பட்டது. அப்போது, வாதி பிரதிவாதிகளுக்கு இடையே சமரச பேச்சு நடத்துவதற்காக 52 பயிற்சி பெற்ற மத்தியஸ் தர்கள் இருந்தனர்.

இம்மையத்துக்கு வரும் வழக்குகள் அதிகரித் திருப்பதால், மத்தியஸ்தர்கள் எண்ணிக்கையும் 944 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. சமரச மையத்தில் 2012ஆம் ஆண்டில் 517 வழக்குகளும், 2013ஆம் ஆண்டில் 799 வழக்குகளும், 2014ஆம் ஆண்டில் 970 வழக்குகளும் சமரச தீர்வு மூலம் முடித்து வைக்கப்பட்டுள்ளன என்றார்.

*நன்றி:* **சட்டப்பாதுகாப்பு.**

## பொது அறிவு தகவல்கள்...

பத்திரிகை வாங்க அதிகம் செலவழிப்பவர்கள் ஸ்வீடன் மற்றும் ஜப்பான் நாட்டுக்காரர்கள்தான்.

• இந்திய வேதங்களை முதன்முதலில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் மாக்ஸ் முல்லர் என்ற ஜெர்மானியர்.

• மொழிவாரியாகப் பிரிக்கப்பட்ட முதல் இந்திய மாநிலம் ஆந்திரா.

• சவூதி அரேபியாவில் நதிகள் கிடையாது.

• மிகவும் அதிக ஓசையை எழுப்பும் உயிரி நீலத் திமிங்கலம்.

• மனிதனைப்போல் குறட்டை விடும் மிருகம் கரடி.

பறவை இனங்கள்!

•இந்தியாவில் 1,228 பறவை இனங்கள் உள்ளன. உலக அளவில் இவை 13 சதவீதமாகும்.

• இந்தியத் தாவர வகைகளில் சுமார் 1,500 மலர் இனம் சார்ந்தவை. இது மொத்த அளவில் 6 சதவீதமாகும்.

• ஒவ்வொரு மின்னலும் விநாடிக்கு 28,500 மைல்கள் வேகத்தில் பூமியை நோக்கிப் பாய்கிறது.

• ஒரு மின்னல் 250 கோடி வாட்ஸ் மின்சார சக்தியுடையது.

• மழைநீரில் 28 சதவீதம் மட்டுமே நிலப்பரப்பில் ஓடி கடலை அடைகிறது.

மீதி 72 சதவீதம் ஆவியாகிக் காற்று மண்டலத்தைச் சென்றடைகிறது.

# திருந்துமா இந்தியா?


ஜெர்மன் நாட்டில் பெர்லின் நகரில் வசிக்கும் நண்பர் ஒருவர் சமீபத்தில் சென்னை வந்திருந்தார். பெங்களூர் தான் அவரது சொந்த ஊர். ஜெர்மனியில் குடியேறி 20 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. அங்கு பென்ஸ் தொழிற்சாலையில் பொருத்துனர் ஆக வேலை செய்கிறார். அரைகுறை தமிழில் பேசுவார். பிட்டராக இருந்தாலும் விவரமானவர்.

பூல துறைகளில் ஞானம் உள்ளவர் அவரிடம் பேசிக்கொண்டிருக்கையில் பல அரிய தகவல்கள் கிடைத்தன.அவர் கூறியது

சார்...இப்போது இந்தியாவிலே பென்ஸ் கார் 45 லட்ச ரூபாய்க்கு கூட கிடைக்குது ஆகா ஜெர்மன் நாட்டு கார் ன்னு பணக்காரர்களும் பெரிய தொழிலதிபர்களும் போட்டி போட்டுக்கிட்டு வாங்குறாங்க. இந்த கார்ல இருக்கற பல முக்கியமான பாகங்கள், கியர்பாக்ஸ் உள்பட, இந்தியாவில் இருக்கும் டாடா கம்பெனியிலே செஞ்சு ஜெர்மனிக்கு வருது...

நாங்க அதை அங்கே பொருத்தி பல நாடுகளுக்கும் விற்பனைக்கு அனுப்பி வைக்கிறோம்! இதுக்கு காரணம் என்ன தெரியுமா? ஜெர்மனியிலே அந்த பாகங்களை உற்பத்தி செய்ய ஆகும் செலவில் கால்வாசி செலவுகூட ஆகாது நம்நாட்டில். நாங்கள் எங்களுக்கு தேவையான டிசைன் மற்றும் மூல பொருட்களைக் கொடுத்து விடுகிறோம்...

இங்கே இந்தியாவில் லேபர், ரொம்ப சீப்! அது ஜெர்மானியர்களுக்கு பெரிய, அட்வான்டேஜ் ஆகிவிடுகிறது இந்தியாவில் லேபர் எவ்வளவு சீப் என்பதற்கு ஒரு உதாரணம் சொல்கிறேன்



கேட்டுக்குங்க சார்.. என்றவர் தன்சட்டைப் பையில் இருந்து, ஒரு காகிதத்தை எடுத்து படித்துக் காட்டினார். அப்படியே ஒரு கனம் அதிர்ந்து போனேன்!


ஒரு ஜெர்மன் தொழிலாளிக்கு குடுக்கற சம்பளத்திலே இரண்டு அமெரிக்க தொழிலாளியை வேலைக்கு அமர்த்தலாம். இல்லையென்றால் தைவான் நாட்டு தொழிலாளி ஐந்து பேரையோ, பிரேசில் நாட்டு தொழிலாளி எட்டுப் பேரையோ வேலைக்கு வைத்துக்கொள்ள முடியும். ஆனால், இந்தியத் தொழிலாளியின் நிலையோ பரிதாபம்? ஒரு ஜெர்மன் தொழிலாளி யின் சம்பளத்தில் 128 இந்திய தொழிலாளர்களை வெட்கக்கேடு வேலைக்கு வைத்துக்கொள்ளலாம் என்றால் பாருங்கள்.

இந்திய தொழிலாளியின் சம்பளம் மணிக்கு 25 ரூபாய் என்றால் ஜெர்மன் தொழிலாளியின் குறைந்தபட்ச சம்பளம் மணிக்கு 1,150 ரூபாய் அப்புறம் ஏன் ஜெர்மன் தொழில் அதிபர்கள், புதிய பொருளாதாரக் கொள்கை வந்த பின்னே இங்கே மூலதனத்தைக் கொட்ட துயங்கப் போறாங்க! கடந்த 20 ஆண்டுகளில் இந்தியாவில் பல தொழில்களில் முதலீடுகளை செய்துள்ளனர்.

ஜெர்மானியர்கள் ஆனால், இதில் சோகமான விஷயம் என்னவென்றால் சுற்றுப்புறச் சூழ்நிலைக்கும் உடல் நலத்திற்கும் கேன்ஸர், ஆஸ்துமா போன்று கேடு விளைவிக்க கூடிய பாதுகாப்பு அம்சம் குறைந்த ஜெர்மனி நாட்டு சட்டப்படி அங்கு தடை செய்யப்பட்ட தொழில்கள்தான் இந்தியாவிற்கு வந்து உள்ளன என்றார் அந்த நண்பர். புதிய பொருளாதாரக் கொள்கை என்கிற பேரில் வெளிநாட்டுக் குப்பைகளைக் கொட்ட இந்தியா என்ன குப்பை தொட்டியா? நம் நாடு அந்நிய நாட்டின் குப்பை கொட்டும் கிடங்கு ஆகாமல் பார்த்துக்கொள்வது ஒவ்வொரு இந்தியனின் கடமை

**- பால்ராஜ்**

# இலவசங்கள்



ஒரு ஊரில் எலித்தொல்லை அதைப் பார்த்த ராஜா, ஒரு செத்த எலி கொண்டு வந்தால் பத்து ரூபாய் தரபப்டும் என்று அறிவித்தார்.

மக்களும் நிறைய எலிகளைக் கொன்று பையில் போட்டு அரண்மனை யில் கொடுத்துப் பணம் பெற்றுச்சென்ற னர். அரண்மனை துர்நாற்றம் எடுக்க ஆரம்பித்தது. அரசன் உடனே செத்த எலியின் வாலைக் கொண்டு வந்தால் போதும் என்று அறிவித்தார். வாலைக்கொண்டு வந்து பரிசு வாங்கும் மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் கூடிக் கொண்டே இருந்தது. ஆனால் எலித்தொல்லை குறைய வில்லை.

இது பற்றி அரசன் தீவிரமாக விசாரித்தில் தெரியவந்தது. பணம் கிடைக்குமே என்று, மக்களே வீட்டில் எலி வளர்க்க ஆரம்பித்து விட்டார்கள்!

இலவசங்கள் வழங்குவதால் மக்கள் பிரச்சினைகள் தீர்ந்து விடாது. வேறு உருவத்தில் உருவெடுக்கும்.

சுதந்திர இந்தியாவில் இதுவரை நடந்திராத வகையில் ஆளும் பாரதிய சனதா அரசைக் கண்டித்து, அரசு வழங்கிய விருதுகளை திரும்பக் கொடுக்கின்ற நிகழ்வுகள் நடந்து கொண்டே இருக்கின்றன. கர்நாடக மாநிலத்தில் சாகித்ய அகடமி விருது பெற்ற பகுத்தறிவு எழுத்தாளர் எம்.எம்.கல்புரிகி அவர்களை இந்து அமைப்பு களைச் சேர்ந்தவர்கள் சுட்டுக்கொன்றனர். இந்நிகழ்வு எழுத்தாளர்களிடையேயும் நடுவண் அரசின் விருதுகளைப் பெற்றவர்களிடையேயும் பெரும் அச்சத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத் தியது. இந்நிகழ்வைக் கண்டிக்கும் வகையில் எழுத்தாளர்கள் கலைஞர்கள் தங்களுக்குத் தரப்பட்ட விருதுகளை திரும்ப ஒப்படைத்து வருகின்றனர்.

இந்திய நாட்டில் மதம் சார்ந்த மோதல்கள் அதிகரித்து வருவதாலும் சகிப்புத் தன்மை குறைந்து வருவதாலும் கல்புர்கி படுகொலையில் சாகித்ய அகடமி மவுனமாக இருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் விருதுகளை ஒப்படைப்பதாக எழுத்தாளர்கள் கூறுகிறார்கள்.

கன்னட எழுத்தாளரும் ஹம்பி கன்னட பல்கலைக்கழக பேராசிரியருமான ரஹமத்தரிகேரி தனக்குக் கொடுத்த விருதை ஒப்படைத்துவிட்டார். விருதுடன் ஒரு லட்சம் ரூபாய்க்கான காசோலை, பொன்னாடை, நினைவுப்பரிசு ஆகியவற்றையும் தபாலில் அனுப்பிவிட்டார். காஷ்மீர் எழுத்தாளர் குலாம் நபி காயல், கன்னட எழுத்தாளர் மற்றும் மொழிபெயர்ப்பாளர் ஸ்ரீநாத், ராஜேஷ் ஜோஷி, இந்தி எழுத்தாளர் மங்களேஷ் டப்ரால், வார்யம் சாநது, ஜி.என்.ரங்கநாதராவ், மும்பையைச் சேர்ந்த உருது எழுத்தாளர் ரஹமான் அப்பாஸ், குஜராத்தைச் சேர்ந்த பிரபல கவிஞர் அனில்ஜோஷி ஆகியோரும் விருதுகளை ஒப்படைத்து விட்டனர். பஞ்சாபி எழுத்தாளர்கள் தலிப்கவுர் திவானா, அஜ்மீர்சிங் அவுலக், சுர்ஜித் பதார் போன்றவர்களும் விருதுகளை திரும்ப ஒப்படைத்தனர். இதில் திவான



# சகிப்புத் தன்மை!

தனது பத்மஸ்ரீ விருதையும் திரும்ப ஒப்படைத்தார் இருபத்தைந்திற்கும் மேலான எழுத்தாளர்கள் தங்களது சாகித்ய அகடமி மற்றும் பத்ம விருதுகளை ஒப்படைத்திருப்பது அரசுக்கு தலைகுனிவாகும்.

குலாம்நபி காயல் கூறும்போது, நாட்டில் உள்ள சிறுபான்மையினர் பாதுகாப்பற்றவர்களாகவும் அச்சுறுத்தப்டுவதாகவும் உணர்கிறார்கள். பேனா இருக்க வேண்டிய இடத்தில், இப்போது துப்பாக்கிக் குண்டுகள் பாய்கிறது என்றார். எழுத்தாளர்கள் டப்ரால், ஜோஷி ஆகியோர் கூறுகையில் கல்புர்கி படுகொலைக்கு சாகித்ய அகடமி வெளிப்படையாக எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும். நாட்டில் இப்போதுள்ள சூழ்நிலைக்கு கண்டனம் தெரிவிப்பது அகடமியின் கடமை என்றனர்.

சாகித்ய அகடமி செயற்குழுவைக் கூட்டியது. அகடமி தலைவர் விஸ்வநாத் பிரசாத் திவாரி தலைமையில் கூட்டம் நடைபெற்றது. சாகித்ய அகடமி தமிழ் மொழிக்கான செயற்குழு உறுப்பினர் பேராசிரியர் கி. நாச்சிமுத்து கலந்து கொண்டார். அந்தக் கூட்டம் முடிந்தபிறகு அவர் கூறியதாவது: எழுத்தாளர்களுக்கு எதிரான வன்முறை மற்றும் படுகொலைகளுக்கு எதிராக கண்டன தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சாகித்ய அகடமிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தங்கள் விருதுகளை திருப்பிக் கொடுத்த எழுத்தாளர்கள் மற்றும் சாகித்ய அகடமி பதவிகளை ராஜினாமா செய்த எழுத்தாளர்கள் தங்கள் முடிவுகளை மறுபரிசிலனை செய்யுமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்றார்.

எழுத்தாளர்களின் ஆதரிப்போர் பலர் இருக்கிறார்கள் என்ற நிலையில் பாஜகவைச் சேர்ந்த எழுத்தாளர்கள் எதிராகவும் ஆர்ப்பாட்டம் செய்திருக்கின்றனர். மோடி மௌனியாகவே இருக்கிறார். பன்னாட்டுத்தளத்தில் இந்தியாவின் நற்பெயர் பலவீனமாகிக் கொண்டிருக்கிறது.

**- இமயவரம்பன்**



Galileo Galilei
(1564-1642)

## பாதுகாக்கப்படும் கலிலியோவின் விரல் !!!

புரட்சிக்கு 15ம் நூற்றாண்டிலேயே வித்திட்டவர். நவீன வானியலின் தந்தை எனக் குறிப்பிடப்படுகின்றார். இத்தாலியில் பிறந்து, சூரியக் குடும்பம் பற்றிய பல உண்மைகளை உலகுக்கு உணர்த்தியவர்.

விஞ்ஞானி ஐன்ஸ்டீனின் மானசீக குருவான கலிலியோ பற்றிய சுவாரஸியமான தகவல்கள் இதோஞ் பெண்டுலம் கடிகாரத்தை உருவாக்க பெரும்பாடுபட்டார் கலிலியோ.

ஆனால் அந்த ஆராய்ச்சியில் அவருக்கு தோல்வியே கிடைத்தது.

ஆயினும் அவரது ஆய்வுக் குறிப்புகள் தான், பின்னாளில் வந்த இயற்பியல் விஞ்ஞானிகளுக்கு வேத பாடமாகியது.

இத்தாலியிலுள்ள பைசா நகர பல்கலைக் கழகத்தில் கலிலியோவுக்கு கணித பேராசிரியராக வேலை கிடைத்தது. ஆனால் தனது ஆராய்ச்சிகளின் காரணமாக மாணவர்கள் மீது கவனம் செலுத்தாமல் இருந்ததால், அவர பல்கலைக் கழகத்திலிருந்து நீக்கி விட்டனர்.

கண்ணாடி பிம்பம் – மெழுகுவர்த்தி மூலம் ஒலியைப் பிரதிபலிக்கும் தொழில்நுட்பம், பாக்கெட்டில் வைக்கும் சீப்பு, ரீஃபில் பேனா போன்ற கண்டுபிடிப்புகளுக்கு கலிலியோவின் ஆய்வுகள் தான் அடிப்படை ஆதாரம்.

தனது சூரிய மண்டலம் பற்றிய கருத்துகளால் வாட்டிக்கான் சிட்டி கத்தோலிக்க நிர்வாகத்தால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். கடுமையான மன உளைச்சலுக்கு ஆளான கலிலியோ, 1633ம் ஆண்டு வீட்டுக்காவலில் வைக்க

உத்தவிடப்பட்டார். 1638ம் ஆண்டு அவருக்கு இரு கண்களும் பாதிக்கப்பட்டு, பார்வை இழந்தார். 1642ம் ஆண்டு தனது வீட்டில் உயிரிழந்தார்.

கலிலியோ இறந்து 100 ஆண்டுகள் கழிந்த பின், 1737ம் ஆண்டு அவரது உடலின் எஞ்சிய பாகங்கள் அனைத்தும்,

கல்லறையிலிருந்து மீண்டும் வெளியே எடுக்கப்பட்டு, சாண்டா குரோஸ் தேவாலயத்தில் அமைக்கப்பட்ட நினைவு மண்டபத்தில் மீண்டும் அடக்கம் செய்யப்பட்டது. அப்போது ஆண்டன் பிரான்செஸ்கோ என்பவர் கலிலியோவின் வலது கை நடுவிரலை எடுத்து பத்திரப்படுத்தினார். அந்த விரல் தற்போது பதப்படுத்தப்பட்டு, இத்தாலியின் புளோரன்ஸ் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் விவசாயப் பிரச்சினை காரணமாக விவசாயிகள் தற்கொலை செய்துகொள்ளும் சம்பவங்களை முற்றிலும் தடுக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் கண்டிப்புடன் கூறியுள்ளது.


நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கடன் தொல்லை காரணமாக விவசாயிகள் தற்கொலை செய்துகொள்ளும் சம்பவங்கள் அதிகரித்து வருவதைக் குறிப்பிட்டு, பஞ்சாபைச் சேர்ந்த யூத் கமல் என்ற தன்னார்வ அமைப்பு உச்ச நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தொடர்ந்தது. விவசாயத் துறையில் வேளாண் நிபுணர் எம்.எஸ்.சுவாமிநாதன் பரிந்துரைகளை அமல்படுத்த உத்தரவிடவேண்டும் என்று அந்த அமைப்பு கோரியிருந்தது. இந்த மனுவுக்கு பதில் அளிக்குமாறு மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில் இந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் நீதிபதிகள் மதன் பி.லோக்கூர், யு.யு.லலித் ஆகியோரைக் கொண்ட அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. அப்போது மத்திய அரசு சார்பில் ஆஜரான கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் பிங்கி ஆனந்த், "நாட்டில் விவசாயிகள் தற்கொலை செய்துகொள்ளும் சம்பவங்கள் பெருமளவு குறைந்துள்ளன" என்றார்.

இதை ஏற்க மறுத்த நீதிபதிகள், "தற்கொலைகளின் எண்ணிக்கை குறைந்திருப்பது போதுமானது அல்ல. நாட்டில் விவசாயப் பிரச்சினை காரணமாக விவசாயிகள் தற்கொலை செய்துகொள்ளும் சம்பவங்கள் முற்றிலும் தடுக்கப்பட வேண்டும். விவசாயிகளுக்கான 2007ஆம் ஆண்டு தேசியக் கொள்கையில் குறைபாடுகள் உள்ளன.

இதை மீண்டும் ஆய்வு செய்வது அவசியம். இந்த மறுஆய்வு குறித்து மத்திய அரசு தனது பதிலை 6 வாரங்களுக்குள் தெரிவிக்க வேண்டும்" என்று உத்தரவிட்டனர்.

மேலும், விவசாயிகள் பிரச்சினை தொடர்பாக எம்.எஸ்.சுவாமிநாதன் தலைமையிலான குழு ஆண்டுக்கு ஒருமுறை மட்டும் கூடி விவாதிப்பது போதுமானதல்ல. இக்குழுவின் கூட்டம் அடிக்கடி நடைபெற வேண்டும்" என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.




இதனிடையே இந்த வழக்கில் உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு தாக்கல் செய்த பதில் மனுவில், விவசாயி தற்கொலை செய்துகொள்வதற்கு வேளாண் பிரச்சினை மட்டுமே காரணம் அல்ல. குடும்பப் பிரச்சினை, தீராத நோய், போதைப் பொருள் பயன்பாடு, சொத்துப் பிரச்சினை, காதல் விவகாரம், குழந்தையின்மை, திருமண வாழ்க்கையில் பிரச்சினை அல்லது விவாகரத்து வரதட்சிணை பிரச்சினை, சமூக அந்தஸ்துக்கு பாதிப்பு என பல்வேறு காரணங்களும் உள்ளன என்று கூறப்பட்டுள்ளது.

மத்திய அரசு தனக்கு எற்பட்டிருக்கும் அவப்பெயரை மறைக்கும் விதமாக வேளாண் பிரச்சனைகள் மட்டுமே விவசாயிகளின் தற் கொலைக்கு காரணமல்ல என்று கூறி பல காரணங்களை கற்பனையாக நீதிமன்றத்தில் கூறியிருப்பத விவசாயிகளை சினம் கொள்ள வைத்துள்ளது.

– நோவா

## கருத்துரிமைக்கு எதிரான இந்துத்துவா வெறிச்செயலுக்கு வலுசேர்க்கும் கருத்தே, நடிகர் கமலஹாசனின் கருத்து!

### தமிழ்க் கலை இலக்கியப் பேரவை அறிக்கை



“நான் தேசிய விருதை திருப்பித் தர மாட்டேன்; விருதுகளைத் திருப்பித் தருவதன் மூலம் அரசாங்கத்தையும், நம்மை மதித்து விருது தந்து நேசிக்கும் மக்களையும் நாம் அவமதிப்பதாய் அமையும்.விருதுகளைத் திருப்பித் தருவது என்பது ஒரு பயனற்ற செயல். விருதுகளைத் திருப்பித் தருவதால் எந்த ஒரு தாக்கமும் ஏற்படாது” என்று 03.11.2015 அன்று, ஹைதராபாத்தில் அளித்த தனது பேட்டியில் நடிகர்கமலஹாசன் கூறியுள்ளார்.

இது ஒருவகையில் இந்துத்துவா மதவாத பா.ச.க. அரசுக்கு ஆதரவான கருத்தாகும்.

தாத்ரியில் இஸ்லாமிய முதியவர் படுகொலை, எழுத்தாளர்கள் கல்பர்கி, பன்சாரே உள்ளிட்டோர் படுகொலை, கர்நாடகத்தில் இளம் எழுத்தாளர் மீது தாக்குதல் என இந்துத்துவாவின் வெறிச்செயல்கள்,கருத்துரிமைக்கு எதிராகத் தொடர்ந்து நடந்தேறுகிறது. மேற்கண்ட செயல்கள் மற்றும் புனே திரைப்பட கல்லூரி மாணவர்களின் போராட்டம் ஆகியவற்றை முன்வைத்து எழுத்தாளர்கள், திரைப்படக் கலைஞர்கள் தங்களுக்கு இந்திய அரசு வழங்கிய விருதுகளை திரும்ப ஒப்படைத்து வருகின்றனர்.

இந்நிலையில் நடிகர் கமலஹாசன் மோடி அரசுக்கு வக்காலத்து வாங்கும் விதமாக கருத்துத்தெரிவித்திருப்பது கண்டிக்கத்தக்கதாகும்.

குஜராத்தில் 3000 பேர் படுகொலை செய்யப்பட்டதற்கு “காரில் போகும் போது பூனைக்குட்டிகள்அடிப்பட்டால் என்ன செய்வது” என்று நஞ்சு கக்கியவர்தான் மோடி. பா.ச.க. அரசினுடைய மதவாதநடவடிக்கைகள், இப்போது இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் பரவி வருகிறது. கருத்துரிமைக்குஎதிராக நடக்கும் வெறிச்செயல்கள் எதற்கும் பதிலளிக்காது, இந்தியத் தலைமையமைச்சர் மோடி மௌனம்காக்கிறார்.

தமிழ்ப் பாதுகாப்பு இயக்கம் சார்பில் தமிழ்த் திரைப்படங்களுக்கு தமிழில் பெயர் வைக்க வேண்டும் என்றுசொன்னபோது, கமலஹாசன் கடைசி வரை அதை மறுத்து, “மும்பை எக்ஸ்பிரஸ்” என்று தனதுதிரைப்படத்தை வெளியிட்டார். அதேபோல் காவிரிப் போராட்டம் நடைபெற்றபோது, “காவிரியில் தண்ணீர்வரவேண்டுமே தவிர, இரத்தம் வரவேண்டியதில்லை” என்று கூறி, தமிழர் உரிமைப் பிரச்சினை என்பதைக்கடந்து கர்நாடகத்திற்கு ஆதரவானக் கருத்தைதான் உரைத்தார்.

திரைத்துறையினர் பலர் தொடர்ந்து முன் வைக்கும் “தமிழ்நாடு திரைப்பட நடிகர்கள் சங்கம்” என்ற பெயர்மாற்றக் கருத்தை குழிதோண்டி புதைக்கும் விதமாக சமீபத்தில் நடந்த தென்னிந்திய திரைப்பட நடிகர்சங்கத் தேர்தலின் போது “இந்தியத் திரைப்பட நடிகர்கள் சங்கம்” என்று பெயர் வைக்க வேண்டும் என்றுதனது இந்தியப் பாசத்தை வெளிக்காட்டினார். மோடியின் தூய்மை இந்தியா திட்டத்தில் பங்கேற்று தன்னையார் என்று அடையாளம் காட்டிக்கொண்டார்.

தன்னை ஒரு முற்போக்காளன், பெரியாரிஸ்ட் என்றெல்லாம் சொல்லிக்கொள்ளும் கமலஹாசன் இப்போதுஇந்துத்துவா மதவாத அரசுக்கு ஆதரவாகப் பேசுகிறார். அவரின் கருத்தென்பது ஆளும் பா.ச.க அரசுக்குவலுசேர்க்கவே பயன்படும்.

சமூகப் படைப்பாளிகள் அனைவரும் தொடர்ந்து கருத்துரிமைக்கு எதிராகக் களம் காண வேண்டும்.கமலஹாசன் போன்ற திரைப்பட கலைஞர்களை தமிழர்கள் அடையாளம் கண்டு கொள்ளவேண்டும்.

●

## சிறுகதை

**இருங்கோவேள்**

# எப்போது சமமாவார்கள்

எனக்கு தொடர்வண்டி புதிது. ஓரிரு முறை வெளியூர் சென்றிருக்கிறேன். சென்னையில் இருந்தாலும் சென்னைக்குள் தொடர் வண்டியில் அதிகம் பயணிப்பதில்லை. அன்று எங்கே பயணச்சீட்டு வாங்க வேண்டும் என்று ஒருவரிடம் விசாரித்து சீட்டை வாங்கிக் கொண்டு வண்டியில் ஏறினேன். அது நுங்கம்பாக்கம். இங்கிருந்து தாம்பரம் செல்ல வேண்டும். இரவு ஒன்பது மணி என்பதால் மக்கள் நெருக்கம் இல்லாமல் வண்டி நகர்ந்தது. மாம்பலத்தில் ஒரு பெண் ஆப்பிள் கூடையுடன் ஏறினார். வண்டி புறப்பட்டதும். ஆறு ஐம்பது ரூபாய் என்று சத்தமாய்ச் சொல்லிக் கொண்டே வியாபாரம் செய்ய முற்பட்டார். யாரும் வாங்குவதாய்க் காணோம்.

சைதாப்பேட்டை வந்தது. வண்டி நிற்பதற்கு முன் என்ன நடந்ததோ தெரியவில்லை. ஆப்பிள் கூடையை பயணிகளுக்கு அருகில் வைத்து விட்டு அந்தப் பெட்டியின் வாசல் அருகில் அமர்ந்து கொண்டார். முகத்தையும் மூடிக்கொண்டார். நின்ற தொடர்வண்டி பயணிகளை இறக்கி ஏற்றி புறப்பட்டது. நான் கேட்காமலேயே அந்தப் பெண் என்னிடம் பேசினார். பார்ப்பதற்கு பழங்கால நடிகை பண்டரிபாய் போன்று இருந்தார். இவர் முகத்தில் சோகம் என்பது இல்லை. ஆனால் உழைத்து, உழைத்து ஒன்றும் கிடைக்கவில்லையே என்ற ஏக்கம் இருந்தது. மரத்திலிருந்து பறிக்கப்பட்ட மாம்பலம் சுடுதரையில் விழுந்து சுருங்கி நிறமிழந்தது போன்ற முகம். “இந்த போலீசுக்காரங்க எங்கள அடிச்சு வெரட்டுராங்க தம்பி. வெரட்டுனாலும் பரவாயில்லை. ஆப்பிள் கூடைய பறித்து ஆப்பிள கீழே கொட்டி மிதிச்சு நாசம் பண்ணிடுடாறங்க, அதனால்தான் அவங்களுக்குப் பயந்து இப்படி ஆப்பிள் கூடை ஒரு பக்கமாவும் நான் ஒருபக்கமாவும் இருக்க வேண்டியிருக்கு“ என்றவர், என்னிடம் வேறொன்றும் எதிர்பார்க்காமல் கூடையின் அருகில் சென்று



கூடையை எடுத்துக் கொண்டு 7 ஐம்பது ரூபாய் என்று விற்கத் தொடங்கினார். அப்போதும் யாரும் வாங்கவில்லை.

பல்லாவரத்தை தொடர்வண்டி தாண்டிய போது, 9 ஆப்பிள் 50 ரூபாய் என்றார். சிலர் வாங்க ஆரம்பித்தார்கள் கூடையில் பாதியளவு விற்பனையாகிவிட்டது. விற்றுக் கொண்டே வந்தவள் என்னருகில் வந்து, "என்ன தம்பி பண்றது நட்டமாத்தான் போயிடும் அதான் முதலாவது கிடைக்குமா என்று விக்கிறேன்" என்று கூறிவிட்டு குரோம்பேட்டை நிறுத்தத்தில் இறங்கி, அடுத்த பெட்டியில் ஏறினார்.

எனது மனம் என்னவோ செய்தது. இம்மாதிரி உழைக்கத் துணிந்தவர்களுக்கு, ஏன் உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைப்பதில்லை. பயணிகளில் பலர் இவர்களைத் தொந்தரவாக எண்ணி புகார் செய்து விடுகிறார்கள். புகார் பெற்றவர்கள் நடவடிக்கை எடுக்கத் தொடங்கிவிடுகிறார்கள்.

ஆனால் இம்மாதிரியான மக்களின் உழைப்பை நம்பி பல உயிர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் என்று நினைக்கும் போது மனிதர்களில் ஏன் இந்த பாரபட்சம்? என்று எண்ணத் தோன்றியது. பலர் அலுவலகத்தில் அமர்ந்து கொண்டே ஒவ்வொரு நாளும் பல ஆயிரங்களை ஊதியமாகப் பெறுகின்றனர். ஆனால் இவர்களைப் போன்றவர் களுக்கோ வயிற்றை நிரப்ப இயலாத சூழ்நிலை.

அன்றைய பயணம் சுவைக்கவில்லை. என் எச்சில் கூட உப்பாக இருப்பதாகத் தோன்றியது. எத்தனை காலங்கள் ஆனாலும் மூளைக்கும் உழைப்புக்கும் உள்ள தூரத்தை குறைக்க முடியாது போலிருக்கிறது. அதில் வியப்பு என்னவென்றால், அந்த உடலுக்குள்தான் மூளை இருக்கிறது. மூளைக்கு இருக்கிற, தரப்படுகிற மரியாதை, உடலுக்கு, உடல் உழைப்புக்குத் தரப்படுவதில்லை. மனிதர்கள் எல்லோரும் எப்போது சமமாவார்கள்?

●

## அரிய தகவல்கள்

1.போனை எடுத்ததும் பேச கிரகாம் பெல் உத்தேசித்த வார்த்தை 'Hello' என்பதாகும்.

2.நத்தை அதன் கண்ணை இழந்துவிட்டால் கொஞ்ச நாளையில் புது கண் உருவாகிடும்.

3.புரூஸ்லீ அரிசிகளை மேல தூக்கி போட்டு அவற்றை சண்டைக்கு நடுவே நூடுல்ஸ் சாப்பிடும் ரெண்டு குச்சியால் பிடிப்பாராம்!

4.ஐரோப்பிய கண்டத்தில் பாலைவனமே கிடையாது!

5.உலகம் முழுக்க 173 மில்லியன் பயனர்கள் 'ஜி மெயில்' வசதியை பயன்படுத்துகிறார்கள்!

## கிறிஸ்துவின் தமிழ் எழுத்தாளர் ஒன்றிப்பு நடத்துகின்ற முப்பெரும் விழா!

இரண்டாம் ஆண்டுவிழா, கருத்தரங்கம் மற்றும் விருது வழங்கும் விழா வருகிற சனிக்கிழமை 14-11-2015 அன்று மந்தைவெளி 25, மாதா சர்ச் சாலையில் உள்ள தியான ஆஸ்ரமத்தில் முழு நாள் நிகழ்வாக நடக்க இருக்கிறது. விழாவை கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கத் தலைவர் திரு. இனிகோ இருதயராஜ் அவர்கள் தொடங்கி வைக்கிறார். முனைவர் அருட்பணி மதுரை ஆனந்த் அவர்கள் தலைமையில் கருத்தரங்கம் நடைபெறுகிறது.

மாலையில் விருது வழங்கும் விழா நடைபெறுகிறது. கிறிஸ்துவின் தமிழ் எழுத்தாளர் ஒன்றிப்பின் தலைவர் மதுரை. இளங்கவின் அவர்கள் வரவேற்றுப் பேசுகிறார். மேதகு ஆயர் முனைவர் லாரன்ஸ் பயஸ் அவர்கள் விருதுகளை வழங்குகிறார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திருமிகு. பீட்டர் அல்போன்ஸ், கவிஞர் மு. மேத்தா, அருட்பணி வின்செண்ட் சின்னத்துரை, கவிஞர். பிறைசூடன், முனைவர். மதுரை ஆனந்த், முனைவர் காவ்யா சண்முகசுந்தரம் ஆகியோர் வாழ்த்திப் பேசுகிறார்கள்.

# TNPSC குரூப் 2 A தேர்வு
# தமிழ்நாடு அரசுப் பணியில்

# 1862 காலியிடங்கள்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நேர்காணல் இல்லாத குரூப் 2 தேர்வுக்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இத்தேர்வு எழுத விரும்பும் பட்டதாரி விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்க வேண்டிய நேரமிது.

தமிழ்நாடு அரசுப்பணிகளில் நிதித்துறை சட்டத்துறை. வருவாய்த்துறை சிறைத்துறை, காவல்துறை, சுகாதாரத்துறை, போக்குவரத்துத்துறை, பதிவுத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் உதவியாளர். பெர்சனல் கிளார்க், லோயர் டிவிஷன் கிளார்க் உள்ளிட்ட பல்வேறு பதவிகளில் 1862 காலி இடங்கள் நிரப்பப்பட உள்ளன. இதற்கான குரூப் 2 ஏ தேர்வு குறித்த அறிவிப்பை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (டி.என்.பி.எஸ்.சி) வெளியிட்டுள்ளது. குரூப் 2 தேர்வில் உள்ளதுபோல் முதல்நிலைத் தேர்வு, மெயின் தேர்வு நேர்காணல் என்ற மூன்று கட்டத் தேர்வு முறை இதற்கு கிடையாது. ஒரே ஒரு எழுத்துத் தேர்வின் மூலமாக தகுதியுடையவர்கள் தேர்ந்தெடுக்கப்பட இருக்கி றார்கள்.

கல்வித் தகுதி : அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் ஏதேனும் ஓர் இளநிலை பட்டப்படிப்பு படித்திருக்க வேண்டும். பத்தாம் வகுப்பு பன்னிரண்டாம் வகுப்பு படித்துவிட்டு இளநிலை பட்டப்படிப்பை படித்திருப்பவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் விண்ணப்பிப்



போர் குறைந்தபட்சம் பத்தாம் வகுப்பில் தமிழை ஒரு பாடமாக எடுத்துப் படித்திருக்க வேண்டியது அவசியம். இந்தப் பணிகளில் 20 சதவீதப் பணியிடங்கள் தமிழ் வழியில் படித்தவர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

நிதித்துறையில் பெர்சனல் கிளார்க் பணியிடங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் வணிகவியல் அல்லது பொருளாதாரம் அல்லது புள்ளியியலில் இளநிலை பட்டம் பெற்றிருக்க வேண்டும் மேலும் லோயர், ஹையர் என இரு நிலைகளிலும் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

சட்டம் மற்றும் நிதித்துறை அல்லாத பிற துறைகள், டி.என்.பிஸ்.சி.தமிழ்நாடு சட்டப்பேரவை போன்றவற்றில் பெர்சனல் கிளார்க் பணியிடங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஏதேனும் ஒரு பட்டப்படிப்பை படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம் மேலும் லோயர், ஹையர் என இரு நிலைகளிலும் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

சட்டம் மற்றும் நிதித்துறை அல்லாத பிற துறைகள், டி.என்.பிஸ.சி. தமிழ்நாடு சட்டப்பேரவை போன்றவற்றில் பெர்சனல் கிளார்க் பணியிடங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஏதேனும் ஒரு பட்டப்டிபப்பை படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம் மேலும் லோயர், ஹையர் என இரு நிலைகளிலும் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலும் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

வருவாய்த்துறை ஆணையாளர் அலுவலகத்தில் உதவியாளர் பணியிடங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் பி.ஏ.பி.எஸ்.சி. பிகாம் படித்தவர்களும் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் பி.ஒ.எல்.மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் பிபிஏ. சென்னை பல்கலைக்கழகத்தில் பிபிஎம் படித்தவர்களும், சென்னை பல்கலைக் கழகம் மற்றும் பாரதியார் பல்கலைக்கழகத்தில் பி.லிட்.படித்தவர்களும் விண்ணபபிக்கலாம்.

சிறைத்துறை, காவல்துறை, சுகாதாரத்துறை, போக்குவரத்துறை, தொழிலாளர் துறை, நெடுஞ்சாலைத்துறை, வரலாற்று ஆவணத் துறைகளில் உதவியாளர் பணியிடங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு படித்தவர்கள் விண்ணப் பிக்கலாம்.

தமிழ்நாடு சட்டப்பேரவையில் லோயர் டிவிஷன் கிளார்க் பணியிடங்களுக்கு அங்கீகரிக் கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பி.ஏ., பி.எஸ்.சி., பி.காம்., படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

வயது வரம்பு அனைத்துப் பணிகளுக்கும் குறைந்தபட்சம் 18 வயது பூர்த்தி ஆகி இருக்க வேண்டும் பொதுப்பிரிவினர் அதிகபட்சமாக 30 வயதுக்குள் இருக்க வேண்டும். பொதுப்பிரிவினர் அல்லாத பிரிவினருக்கு அதிகபட்ச வயதுவரம்பு ஏதும் இல்லை.

பொதுப்பிரிவைச் சேர்ந்தவர்கள் மாநில அரசு அல்லது மத்திய அரசுப் பணிகளில் சேர்ந்து 5 ஆண்டுகள் நிறைவடைந்திருப்பின். அவர்கள் இந்துப் பணிகளுக்கு விண்ணப்பிக்க முடியாது. வேறு அரசு நிறுவனங்களில் பணி அமர்த்தப்படாத நிலையில் உள்ளவர்கள் ஆட்குறைப்பை எதிர்கொள்ளும் ஊழியர்கள் இந்தத் தேர்வை எழுத அனுமதிக்கப்படுவார்கள். ஆனால் அவர்களுக்கு குறிப்பிட்ட தகுதிகள் இருக்க வேண்டியது அவசியம்.

இதற்கான எழுத்துத் தேர்வு இரண்டு பிரிவுகளைக் கொண்டது. முதல் பிரிவு ஜெனரல் ஸ்டடீஸ் ஆகும். இதில் பட்டப்படிப்புத் தரத்தில், ஜெனரல் ஸ்டடிஸ் பிரிவில் 75 கேள்விகள், எஸ்.எஸ்.எல்.சி. தரத்தில் மென்டல் எபிலிட்டி பிரிவில் 25 கேள்விகள் என மொத்தம் 100 கேள்விகள் கேட்கப்படும்.

ஜெனரல் ஸ்டடிஸில் பொது அறிவியல், நடப்பு நிகழ்வுகள், புவியியல், இந்திய வரலாறு மற்றும் பண்பாடு, இந்திய அரசியலமைப்பு மற்றும் நிர்வாகம். இந்தியப் பொருளாதாரம் இந்திய தேசிய விடுதலை இயக்கம் ஆகிய பிரிவுகளில் இருந்து கேள்விகள் கேட்கப்படும். டேட்டா கனெக்ஷன் டேட்டா டோபிள்ஸ், கிராப்ஸ் அனலிட்டிக்கல் இட்னர்பிரட்டேஷன் டேட்டா, சிம்ப்ளிபிக் கேஷன், சதவீதம் நேரம், தூரம் ரீ சனிங், வரைபடம் உள்பட பல்வேறு மெண்டல் எபிலிட்டி பிரிவுகளில் இருந்து கேள்விகள் கேட்கப்படும்.

இரண்டாவது பிரிவு எஸ்.எஸ்.எல்.சி.தரத்தில் பொதுத்தமிழ் அல்லது பொது ஆங்கிலம் ஆகும். இதில் 100 கேள்விகள் கேட்கப்படும் தமிழ்ப் பகுதியில் இலக்கணம், இலக்கியம், தமிழ் அறிஞர்கள், அவர்களின் தமிழ்த் தொண்டு ஆகிய பாடப்பகுதிகளிலிருந்து கேள்விகள் கேட்கப்படும்.

இந்தத் தேர்வு 3 மணி நேரம் நடைபெறும் 200 கேள்விகளுக்கு மொத்தம் 300 மதிப்பெண்கள் நெகட்டிவ் மதிப்பெண்கள் கிடையாது. கேள்விகள் அனைத்தும் அப்ஜெக்டிவ் முறையில் இருக்கும். இதற்கான பாடத்திட்டங்களை தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வு ஆணையம் தனது இணைய தளத்தில் வெளியிட்டுள்ளது.

இத்தேர்வு எழுத ஆன்லைன் மூலம் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். நிழற்படம், கையெழுத்து ஆகியவற்றை முன்னதாகவே ஸ்கேன் செய்து வைத்திருக்க வேண்டும். இமெயில் முகவரி தொடர்பு கொள்ள மொபைல் எண்ணும் அவசியம். இப்பணிகளுக்கான விண்ணப்பம் மற்றும் தேர்வுக்கட்டணம் 125 (அதாவது தேர்வுக் கட்டணம் ரூ. 75 விண்ணப்பக் கட்டணம் ரூ.50) ஒரு முறை பதிவு முறையில் ஏற்கனவே ரூ.50 செலுத்தி விண்ணப்பித்து பதிவு என் பெற்றவர்கள். ஐந்து ஆண்டுகளுக்கு விண்ணப்பக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை. விண்ணப்பக் கட்டணத்தை ஆன்லைனில் நெட்பேங்கிங் கிரெடிட் கார்டு, டெபிட் கார்டு மூலமாக செலுத்தலாம். ஆப்லைன் முறையில் என்றால் இந்தியன் வங்கி அல்லது ஏதேனும் ஒரு தலைமை தபால் நிலையம் மூலமாக கட்டணம் செலுத்தலாம்.

ஆன்லைன் மூலம் விண்ணப்பித்த பிறகு அந்த ஃபைலை ஒரு பிரிண்ட் எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். பிரிண்ட் அவுட்டையோ அதன் நகல்களையோ எதையும் தேர்வாணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டிய அவசியமில்லை. தேர்வு நடைபெற இருப்பதற்கு ஒருவாரம முன்னதாக இணையதளத்தில் தங்களது ஹால் டிக்கெட்டை விண்ணப்பதாரர்கள் பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டும். தகுதிகள், விண்ணப்பிக்கும் முறை, கட்டணம் செலுத்தும் முறை குறித்த அனைத்து விவரங்களும் டிஎன்பிஎஸ்சியின் இணையதளத்தில விரிவாக கொடுக்கப்பட்டன.

ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க கடைசி தேதி : 18.11.2015

விவரங்களுக்கு : www.tnpscexams.net www.tnpsc.gov.in

**- உமாமகேசுவரி**

### குரூப்-1 தேர்வு எப்படி இருக்கும்?

இத்தேர்வு முதல் நிலைத் தேர்வு, மெயின் தேர்வு, நேர்காணல்...என மூன்று கட்டங்களாக இருக்கும். முதல் நிலைத் தேர்வு வருகிற ஏப்ரல் மாதம் 26-ஆம் தேதி காலை 10 மணி முதல் 1 மணி வரை நடைபெறுகிறது.

மூன்று மணி நேரம் நடைபெறும் இத்தேர்வில் ஜெனரல் ஸ்டடீஸ் குறித்து 150 கேள்விகள் அப்ஜெக்ட்டிவ் முறையில் (பட்ட நிலையில்) கேட்கப்படும். ஆப்டிட்யூட் அண்ட் மெண்டல் எபிலிட்டி டெஸ்ட்டில் (எஸ்எஸ்எல்சி நிலையில்) 50 கேள்விகள் கேட்கப்படும். இதற்கு மொத்தம் 300 மதிப்பெண்கள். தாழ்த்தப்பட்டோர், அருந்ததியர், பழங்குடியினர், மிகவும் பிற்பட்ட வகுப்பினர், சீர்மரபினர், பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப் பட்ட முஸ்லிம்கள் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் தகுதி பெற குறைந்தது 90 மதிப்பெண்களும் மற்றவர்கள் 120 மதிப்பெண்களும் எடுக்க வேண்டும்.

மெயின் தேர்வில் மூன்று தாள்கள் உண்டு. முதல் தாளில் இந்திய தற்கால வரலாறு மற்றும் இந்தியக் கலாசாரம், ஜெனரல் ஆப்டிட்யூட் அண்ட் மெண்டல் எபிலிட்டி டெஸ்ட், இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் வளர்ச்சியில் அறிவியல் தொழில்நுட்பத்தின் தாக்கம் மற்றும் பங்கு குறித்து கேள்விகள் இருக்கும்.

சசிகலா தியேட்டரை விலைக்கு வாங்க விருப்பமாக இருக்கிறார் என்பதை அறிந்த ஜார்ஜ். இந்த தியேட்டரை திறக்க தடையில்லா சான்று தராமல் மாதக்கணக்கில் இழுத்தடிக்கிறார். ஆனால் சத்யம் குழுமம் எதற்கும் சளைக்கவில்லை. சின்னம்மா வேண்டும் என்று சொல்லியும் விற்க மறுப்பதற்கு உனக்கு என்ன துணிச்சல் என்று வெகுண்டெழுந்தார்.

ஜார்ஜ் உடனடியாக நில அபகரிப்புப் புகார் பாய்கிறது சத்யம் நிறுவனத்தின் உரிமையாளர்கள் மீது சத்யம் நிறுவனத்தின் உரிமையாளர்களில் ஒருவரான ஸ்வரூப் ரெட்டி மற்றும் அவர் உறவினர் சுஜய் ஆனந்த் ரெட்டி ஆகியோர் மீது நில அபகரிப்பு வழக்கு பதிவு செய்யப்படுகிறது. சுஜய் ஆனந்த் ரெட்டி கைது செய்யப்படுகிறார். ஸ்வரூப் ரெட்டி தலை மறைவாகிறார்.

ஆர்ச்சிட் ஃபவுன்டேஷன் என்ற நிறுவனத்தின் இயக்குநரான சவுந்தரபாண்டியன் என்பவரும் கைது செய்யப்படுகிறார். தலைமறைவாக இருந்த ஸ்வரூப் ரெட்டியிடம் விஷயம் தெள்ளத்தெளிவாக விளக்கப்படுகிறது. தியேட்டரை விற்றால் தப்பிப்பாய் இல்லையென்றால் பழல்தான் என்ற விஷயம் விளக்கிச் சொல்லப்படுகிறது. பணிகிறார் ரெட்டி தியேட்டர் கைமாறுகிறது.

இணைப்பு 1 இணைப்பு 2 இணைப்பு 3

ஒரு தொழில் என்று தொடங்கினால் அதை சரியாகச் செய்ய வேண்டுமல்லவா? அதற்காகத்தான் ஹாட் வீல்ஸ் இன்ஜினியரிங் என்ற நிறுவனத்தின் பெயரை ஜாஸ் சினிமாஸ் என்று சின்னம்மா மாற்றுகிறார்.

இன்னும் ஒரே மாதத்தில் சொத்துக் குவிப்பு வழக்கில் தீர்ப்பு வர இருந்த நிலையில். இப்படி ஒரு கூட்டத்தை நடத்தி, அடாவடியாக 11 தியேட்டர்களை அடித்துபிடுங்க இந்த பேராசைக்காரரின் இருவருக்கும் எத்தனை




# மீண்டும் மீண்டும் தேர்ந்தெடுப்பார்கள்?

துணிச்சல் இருக்க வேண்டும்? இது யார் தந்த துணிச்சல்? ஜெயலலிதா இல்லாவிட்டால் இவர்களால் சினிமாத் தொழிலில் பழம் தின்று கொட்டை போட்ட சத்யம் குழுவினரைமிரட்டி 11 தியேட்டர்களை விலைக்கு வாங்க முடியுமா?

தியேட்டர்கள் கைக்கு வந்த பிறகு சென்னை சத்யம் தியேட்டர்கள் குழுமத்துக்கு இந்த 11 தியேட்டர்களும் லீசுக்கு விடப்பட்டுள்ளன.

1991ல் 66.5 கோடி ரூபாய்க்கு வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்து, அதற்கான வழக்கை 18 ஆண்டுகள் இழுத்தடித்து 30 நாட்களில் அந்த வழக்கில் தீர்ப்பு என்று இருக்கும் நிலையில் ஒரு தொழிலதிபரை மிரட்டி 11 தியேட்டர்களை விலைக்கு வாங்குகிறார்கள் என்றால், இந்த முட்டாள் மக்கள் நம்மை மீண்டும் மீண்டும் தேர்ந்தெடுப்பார்கள் என்ற திமிரும் அகம் பாவமும்தானே? ●



## அடடே.... அப்படியா?!!!

உலகில் அதிக அளவு மனித உயிர்கள் பலியாகக் காரணமாக இருக்கும் உயிரினம், கொசு.

ஒரு மணிநேரம் தொடர்ந்து ஹெட்போனை பயன்படுத்தினால், அது நம் காதுகளில் உள்ள கிருமிகளை 700 மடங்கு அதிகரிக்கும்.

சாதாரணமாக கண்களில் காணப் படும் வெண்மை நிறுத்துக்குப் பதில், நீல நிறத்தைக் கொண்டிருக்கும் மனிதனின் கண்களுக்கு இருட்டில் காணும் சக்தி அதிகம்.

ரோலர் கோஸ்டர் எனப்படும் மிகப்பெரிய ராட்டினத்தில் பயணம் செய்வதால், மூளையில் ரத்தம் கட்டிக்கொள்ள வாய்ப்புகள் அதிகம்.

வெங்காயம் வெட்டும்போது கண்ணீர் வருகிறதா? ஒரு சூயிங்கம் மென்று கொண்டே, வெங்காயம் வெட்டினால் கண்ணீர் வருவது மற்றும் கண் எரிச்சல் பெருமளவு குறையும்.

ஒரு துளி மதுபானத்தை ஒரு தேனின் மேல் தெளித்தால், அதனால் வலி தாங்க முடியாமல், தன்னைத்தானே கொட்டிக்கொண்டு இறந்துவிடும்.


பலரும் நினைத்துக் கொண்டிருப்பதைப் போல, பணத்தாள் (ரூபாய் நோட்டு காகிதத்தால் தயாரிக்கப்படுவது இல்லை. அது ஒரு வகை காட்டன் துணியால் செய்யப்பட்டது.

உலகின் மிக நீளமான நதியான நைல் நதி, எகிப்தில் உள்ளது என்று பலருக்கும் தெரியும். ஆனால், நைல் நதியின் அடிப்பரப்பில் மற்றொரு நதி ஒன்று ஓடுகிறது. அதன் தண்ணீரின் அளவு, மேற்பகுதியில் ஓடும் நைல் நதியின் தண்ணீரின் அளவைவிடவும் ஆறு மடங்கு அதிகம்.

# 4G ஏர்டெல்லின் ஏமாற்று வேலை?

மொபைல் நாயகன் ஏர்டெல் கடந்த மாதம் (ஆகஸ்ட் 2015) இந்தியாவின் மொபைல் வாடிக்கையாளர்களுக்கு ஒருசவால் விடுத்தது. ஏர்டெல் 4Gயை விட அதிகமான வேகம் உள்ள எந்த நெட்வொர்க்காவது உண்டா? என்று கேட்டது. அப்படி இருப்பதாக நிரூபித்தால் நிரூபித்தவரின் வாழ்நாள் முழுமைக்குமான மொபைல் செலவுகளை ஏற்கத் தயார் என்றது. ஏர்டெல் சவால் என்ற புகழ் பெற்ற இந்த விளம்பரத்தை தொழில்நுட்ப விஷயங்களில் அக்கறை உள்ள வாசகர்கள் அறிந்திருக்கக் கூடும். இந்தியாவில் 4Gசேவையை நாங்கள்தான் முதன் முதலில் கொண்டு வந்தோம் என்று மார்தட்டுகிறது ஏர்டெல்...

ஏப்ரல் 2012இல் கொல்கத்தாவில் ஏர்டெல்லின் 4G சேவையை அன்றைய தொலைத்தொடர்பு அமைச்சர் கபில் சிபல் தொடங்கி வைத்தார். கொல்கத்தாவில் மட்டுமே இந்த சேவை கிடைத்தது. தொடர்ந்தும் அடுத்தடுத்து 51 நகரங்களுக்கு இந்தச் சேவை விரிவடைந்தது. 4Gஉலகில் நுழைந்தது இந்தியா தற்போது 2015 ஆகஸ்ட் 6 முதல் நாடு முழுவதும் 4Gசேவையைஏர்டெல் வழங்குகிறது பன்னிரண்டு தொலைத்தொடர்பு வட்டங்களில் உள்ள 296 நகரங்களில் 4Gசேவையை ஏர்டெல் வழங்குகிறது. அதாவது நடப்பாண்டில் (2015 ஆம் ஆண்டில்) மொத்த இந்தியாவும் 4Gசேவையைப் பெறுகிறது. இந்த நிமிடம் வரை ஏர்டெல்லைத் தவிர வேறு எந்த நிறுவனமும் 4Gசேவையை வழங்கவில்லை...2015 டிசம்பரில் முகேஷ் அம்பானியின் ரிலையன்ஸ் ஜியோ மற்றும் ஏர்செல் ஆகிய நிறுவனங்கள் 4Gசேவையை வழங்கப்போவதாக அறிவித்து உள்ளன.



BSNL பொதுத்துறைநிறுவனம் இதைப்பற்றி இது வரை எந்த அக்கறையும் காட்டாதது ஏன் தெரியுமா? மெய்யான 4G அல்ல! தொழில்நுட்பம் தான்! ஏர்டெல் வழங்கும் 4G சேவை மெய்யான 4G தொழில்நுட்பம் கொண்டதல்ல இது LTE (LONGTERM EVOLUTION) எனப்படும் தொழில் நுட்பம் ஆகும். சேவை என்றால் 4G அலைக்கற்றை 4G Spectrum வேண்டும் அல்லவா?ஆனால் இந்திய அரசு இதுவரை 4G அலைக்கற்றையை ஏலம் விடவோ ஒதுக்கீடு செய்யவோ முன்வரவில்லை என்கிற போது 4G சேவை என்று உரிமை கோருவது சரிதானா? LTE தொழில்நுட்பம் என்பது இருக்கின்ற 3G அல்லது WiMAX அலைக் கற்றையை வைத்துக்கொண்டு அதில் தேவையான மேம்பாடுகளைச் செய்வதன் மூலம் 3Gயை விட அதிகமான வேகத்தைத் தருவது என்பதுதான்.

கொல்கத்தாவில் 4G சேவை வழங்கியதாக உரிமை கோரிய ஏர்டெல் நிறுவனம் சீனாவின் மொபைல் உற்பத்தி நிறுவனமான ZTE நிறுவனத்துடன் சேர்ந்து TD-LTE தொழில் நுட்பத்தில் சேவையை வழங்கியது. (TD என்றால்Time Division என்று பொருள் TimeDivision, Code Division, Frequency Division ஆகியவை தொலைத்தொடர்பின் தொழில் நுட்பங்கள் ஆகும். ஏர்டெல் வழங்கும் 4G சேவை மற்றும் பிற நிறுவனங்கள் வழங்க இருக்கும் 4G சேவை உட்பட இவை யாவும் LTE தொழில் நுட்பச் சேவையே அன்றி, மெய்யான 4G சேவை அல்ல. LTE என்பது 3Gயைவிட மேலான ஆனால்4Gயை விடக்குறைந்த சேவை ஆகும். அதாவது 3க்கும் 4க்கும் இடைப்பட்ட சேவைஆகும்.

(It is a rational number between 3 and 4but well beyond 3.5)அப்படி என்றால் எது மெய்யான 4G இதை அறிவிக்கும் அதிகாரம் யாருக்கு? ஐ.நா.வின் சார்பு அமைப்பான (agency ) ITU (International Telecommuni cations Union ) எனப்படும் சர்வதேசதொலைத் தொடர்புச் சங்கம் என்ற அமைப்புதான் உலகளவில் 2G,3G, 4G ஆகிய தொழில்நுட்பங்களை வரைய றுத்து வகை பிரித்து அடையாளப்படுத்தி அறிவிக்கும் அதிகாரம் படைத்த ஒரே அமைப்பாகும்!! வேறு எவருக்கும் இந்தஅதிகாரம் கிடையாது.

கபில் சிபல் சுனில் மிட்டல், வினோத் ராய் உள்ளிட்ட எவர் ஒருவருக்கும் இந்த அதிகாரம் கிடையாது. யார் இந்த வினோத்ராய் ?ஞாபகம் வருகிறதா! முன்னாள் CAG (தலைமைக் கணக்குஅதிகாரி) தான் இவர்! பொய்யாய்ப் போன ஏர்டெல்விளம்பரம்! எங்களை விட வேகமான நெட்வொர்க் இருப்பதாக நிரூபித்தால் உங்களின் ஆயுட்காலம் முழுமைக்குமான மொபைல் கட்டணத்தை நாங்களே செலுத்துவோம் என்ற ஏர்டெல் விளம்பரம் இந்தியாவுக்குப் பொருந் தாது...ஏனெனில், இந்தியாவில் இதில் ஏர்டெல் லுடன் போட்டி போட எவரும் இல்லை. மற்ற எந்த நிறுவனமும் இன்னும் LTE சேவை வழங்க வில்லை. எனவே களத்தில் இருப்பது ஏர்டெல் மட்டும்தான். போட்டியே இல்லாதபோது சவால் விடுவது எப்படிப் பொருந்தும்? சர்வதேச அளவில் ஏர்டெல் வழங்கும் LTE சேவையின் வேகம் என்ன என்று பார்ப்போம்.

ஓப்பன் சிக்னல் (Open Signal என்ற நிறுவனம் உலக அளவில் 68 நாடுகளில் இயங்கும் 183 LTE நெட்வொர்க்குகளைப் பரிசோதித்து அவற்றின் வேகத்தைக் கண்டறிந்தது நடப்பாண் டின் மூன்றாவது கால்பகுதிக்கான(Third quarter of 2015) முடிவுகளின்படி ஏர்டெல்நிறுவனம் பதிவிறக்க வேகத்தைப் பொறுத்து 147 ஆம் இடத்தில் இருக்கிறது. மொத்தம் 183 நெட்வொர்க்களில் ஏர்டெல் 147 ஆவது இடம்!! முதலிடத்தில் நியூசிலாந்து 36 Mbps வேகத்துடனும் இரண்டாம் இடத்தில் சிங்கப்பூர் 33 Mbps வேகத்துடனும் உள்ளன. இவர்கள் கூட யாரையும் போட்டிக்கு அழைக்கவில்லை. எனவே...எங்களை விடவேகம் யாருக்காவது உண்டா என்று ஏர்டெல் இந்தியா வில் மட்டும் தான் கேட்க முடியும். உலகத்தை நோக்கிக்கேட்டால் என்ன ஆகும்? அத்தனை பேரின் மொபைல் கட்டணத்தைச் செலுத்த முடியாமல் ஏர்டெல் திவால் ஆகும்! ஆகஸ்ட் 6, 2015 அன்று இந்தியா தொழில் நுட்பத்தில்

*நுழைந்து விட்டது என்றாலும் 127 கோடி மக்களுக்கு இந்தச் செய்தி எட்டியதா? இல்லை. படித்த அறிவாளிப் பகுதியினருக்கே இந்தச் செய்தி இன்னும் போய்ச் சேரவில்லை. ஆங்கில ஏடுகளில் கூட தொழில்நுட்பம் குறித்த கட்டுரை கள் எழுதப்படவில்லை. வணிக நோக்கில் வெளியான கட்டுரைகளைத் தவிர, இந்தக் கட்டுரைதான் 4G குறித்த முதல் தமிழ்க் கட்டுரை என்று எங்களால் அடித்துக்கூற இயலும்..இந்த நிலையில்தான் அறிவியல் உள்ளது! தெருப்பொறுக்குவது எப்படி அதில் உள்ள நுட்பங்கள் என்ன என்று மணிக் கணக்கில் விவாதம் நடத்தும் தமிழ் டி.வி.சேனல்கள் முக்கியத்துவம் வாய்ந்த இந்த 4G குறித்து விவாதம் நடத்த முன்வருவார்களா?*

*நன்றி:* **நியூட்டன் அறிவியல் மன்றம்.**

●

## "முத்தமிழ்க்காவலர்" கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களின் "தமிழர் நாடு" இதழ் தொகுப்பு வெளியீட்டு விழா!

"முத்தமிழ்க்காவலர்" கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் எழுத்துகளைத் தொகுத்து உருவாக்கப்பட்டுள்ள "தமிழர் நாடு" நூலின் வெளியீட்டு விழா, அவர்கள் நடத்திய "தமிழர் நாடு" மாத இதழின் தொகுப்பு வெளியீட்டு விழா, 2015 நவம்பர் 7 அன்று சென்னையில் சிறப்புற நடைபெற்றது.

17.08.1949 முதல் 17.07.1951 வரை "தமிழர் நாடு" மாத இதழ் வந்தது. அந்த 24 மாதங்களின் தொகுப்பு – 1308 பக்கங்களில் ஒரே நூலாக – முத்தமிழ்க்காவலர் பெயரன் முனைவர் கோ. வீரமணி அவர்களால் தொகுக்கப் பட்டது. காவ்யா பதிப்பகம் இந்நூலை வெளியிட் டுள்ளது.




காவ்யா பதிப்பகமும், தமிழ்க் கலை இலக்கியப் பேரவையும் இணைந்து, சென்னை எழும்பூர் இக்சா மையத்தில் நடத்திய நடத்திய இந்நூல் வெளியீட்டு விழாவிற்கு, தமிழகத் தமிழாசிரியர் கழக மேனாள் தலைவர் புலவர் கி.த. பச்சையப்பனார் தலைமை யேற்றார்.

காவ்யா பதிப்பக உரிமையாளர் பேராசிரியர் காவ்யா சண்முகசுந்தரம் அவர்கள் வரவேற்றார். தமிழ்க் கலை இலக்கியப் பேரவை நடுவண் குழு உறுப்பினர் பாவலர் கவிபாஸ்கர், நிகழ்வைத் தொகுத்து வழங்கினார்.

தமிழ்த் தேசியப் பேரியக்கத் தலைவர் தோழர் பெ. மணியரசன், நூலை வெளியிட, புலவர் இரத்தின வேலவர், உணர்ச்சிப்பாவலர் காசி ஆனந்தன், அண்ணல் தங்கோவின் பெயரன் திரு. செ. அருட்செல்வன், மறைமலையடிகளாரின் பெயரன் மறை. தி. தாயுமானவன், புலவர் இரத்தினவேலவர் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். மொழிப்போர் ஈகி விருகம்பாக்கம் அரங்கநாதன் அவர்களின் மகன் அமுதவாணன் அவர்களுக்கு தலைவர் பெ.மணியரசன், துண்டணிவித்து சிறப்பு செய்தார்.

வாழ்த்துரை வழங்கிய பாவலர் காசி ஆனந்தன், சமற்கிருத ஆதிக்கத்திலிருந்து தமிழைக் காக்கப் போராடியது போல், ஆங்கில மொழிக் கலப்புக்கு எதிராகப் பெரும் போராட்டத்தை நடத்த நாம் அணியமாக வேண்டும் என்றார்.

பின்னர், பேரியக்கத் தலைவர் தோழர் பெ. மணியரசன் சிறப்புரை நிகழ்த்தினார். நிறைவில், இந்நூலைத் தொகுத்துள்ள, அய்யா கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களின் பெயரனும், திருச்சி உருமு தனலெட்சுமி கல்லூரி தமிழ்த்துறைத் தலைவருமான பேராசிரியர் கோ. வீரமணி அவர்கள் ஏற்புரை நிகழ்த்தினார்.

நிகழ்வில், எழுகதிர் ஆசிரியர் அருகோ, செந்தமிழ்வேள்ளிச் சதுரர் திரு. மு.பெ. சத்தியவேல் முருகனார், தமிழ்த் தேசியப் பேரியக்கப் பொதுச் செயலாளர் தோழர் கி. வெங்கட்ராமன், தமிழ்த் தேச மக்கள் கட்சிப் பொதுச் செயலாளர் தோழர் தமிழ் நேயன், உலகத் தமிழ்க் கழகப் பொதுச் செயலாளர் தோழர் அன்புவாணன், பேராசிரியர் யோகீசுவரன், சாகித்திய அகாதமியின் மேனாள் சென்னை பொறுப்பாளர் திரு. இளங்கோ, செம்மொழி ஆய்வு நிறுவன முதுநிலை முனைவர் பட்ட ஆய்வாளர் பேரா. அய்யப்பன், படைப்பிலக்கியர் கிருஷ்ண பிரகாசு, முற்றம் மாத இதழின் சார்பில், முற்றம் இதழ் ஆசிரியரும், செந்தநாடு ஊடகவியலாளர் சங்கத் தலைவர் தோழர் விசவனூர் வே. தளபதி உள்ளிட்ட பல்வேறு அமைப்புத் தோழர்களும், அறிஞர்களும் கலந்து கொண்டனர்.

●


Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5, Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 weavers street triplicane, chennai-5, Editor: **V. THALAPATHI.**



விரிவுபடுத்தப்பட்ட மாளிகை
சிறப்பு தள்ளுபடிகளுடன்
பரவசமூட்டும் அனைத்து வித ஆடைகளும்
பள்ளிச் சீருடைகளை
வாங்கி மகிழ்ந்திட அழைக்கிறது
ராம்
டெக்ஸ்டைல்ஸ் A/c
135, நேரு வீதி, திண்டிவனம்.
HAPPY
DIWALI
ராம்
டெக்ஸ்டைல்ஸ் A/c

MUTRAM - Tamil & English Monthly R.Dis No. 1678-2012
RNI No. TNBIL/2010/36924. REGISTERED TN / CC ( S ) DN / 496 / 14 - 16.
Date of Publication 7th of every month

# கவிபாஸ்கர்

## புதிய நூல்கள் விற்பனைக்கு



### நூல்கள்

காற்றில் மிதந்து வருகிறார் கண்ணதாசன் (கட்டுரைகள்)
பக்கம்: 176
விலை: ரூ. 150/-

வணக்கம் தோழர் (கவிதைகள்)
பக்கம்: 80
விலை: ரூ.65/-

போர்த்தொழில்
(பாவரங்கக் கவிதைகள்)
பக்கம்: 112
விலை: ரூ 75/-

கூட்டாஞ்சோறு (கவிதைகள்)
பக்கம்: 120
விலை: ரூ. 100/-

### குறுந்தகடுகள் (பாடல்கள்)

பனைமரக்காற்று
(ஈழப்பாடல்கள்)
விலை: ரூ60/-

நெருப்பின் குரல்
(ஈகியர் பாடல்கள்)
விலை:ரூ. 60/-

உயிரெழுத்து
(குழந்தைப் பாடல்கள்)
விலை: ரூ.60/-

நூல்கள் & குறுந்தகடுகள் மொத்த விலை ரூ. 575/—

25% கழிவில் மொத்தத் தொகுப்பு ரூ. 430/-



தொடர்புக்கு: 98416 04017 / 90471 62164 / 044 24742 911

புல்லாங்குழல் வெளியீடு